Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2967)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (11.08.2013) பக்கங்கள் 20 ஓசை - 315
















## கொழும்பு கிராண்ட்பாஸில் பள்ளிவாசல் மீது தாக்குதல்

### நிலைமையைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு



(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் சுவர்ண சைத்திய வீதியிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மீது நேற்று மாலை நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த 5 பேர் கொழும்பு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், காயப்பட்டவர்களில் பொலிஸாரும் உள்ளடங்குகின்றனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த கிராண்ட்பாஸில் இன்று காலை 7.00 மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கடமைகளுக்கு அப்பாற்பட்ட எந்தச் செயலிலும் ஈடுபடாதீர்

### படையினருக்கு புதிய தளபதி அறிவுறுத்து

படையினர் தமது கடமைகளுக்கு அப்பாற்பட்ட எந்தச் செயல்களிலும் ஈடுபடுவதை தான் சகித்துக் கொள்ளப் போவதில்லை என்று புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பனாகொடவில் உள்ள, இலகு காலாற்படைப்பிரிவின் தலைமையகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எல்லா வேளைகளிலும் படையினர் கடுமையான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

படையினர் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கு அப்பால் செயற்படுவதை சகித்துக் கொண்டிருக்கமாட்டேன் என்றும் அவர் எச்சரித்தார்.

வெலிவேரியவில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது படையினர் நடத்திய தாக்குதல், கடும் எதிர்ப்பையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# 25 வருடமாக நாம் கூறி வருவதையே இன்று தூசி தட்டுகிறார் விக்னேஸ்வரன்

### ஈ.பி.டி.பி.யின் முதன்மை வேட்பாளர் தவராசா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இருபத்தைந்து வருடங்களாக நாங்கள் கூறி வருவதை தூசி தட்டி எடுத்து புதிதாகக் கூறி வருகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் விக்கினேஸ்வரன் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடும் ஈ.பி.டி.பி. கட்சியின் முதன்மை வேட்பாளர் தவராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் நடைபெற்ற இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


எமது முன்னணி ஆட்சிக்கு வந்தால் 13 ஆவது அரசியல் சீர்திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவோம்.

கடந்த 25 வருடங்களாக எமது கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இதனையே கூறி வருகின்றார். இணக்க அரசியலின் மூலமாக இந்த 13 ஆவது சீர்திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த முடிமயும். நாங்கள் வென்றால் இதில் உள்ள சர்ச்சைக்குரிய விடயங்களை அரசாங்கத்துடன் பேசி நடைமுறைப் படுத்துவோம்.

இதுவரை பிழையான அரசியல் வியூகங்களினால் எத்தனையோ உயிர்களை இழந்தோம். கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த உடமைகளை இழந்தோம். எமது இளைஞர், யுவதிகளின் கல்வியினை இழந்தோம்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## எல்லை தாண்டும் இந்திய மீனவரை உடன் கைது செய்யுமாறு உத்தரவு



(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்த அமைச்சர் ராஜித மாதகல் பகுதிக்குச் சென்று அங்குள்ள மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது, குறித்த பகுதியில் இந்திய இழுவைப் படகுகள் மற்றும் சாதாரண படகுகளில் பெருமளவான இந்திய மீனவர்கள் வந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## வெலிவேரிய சம்பவம் குறித்து சுயாதீன விசாரணை வேண்டும்

### மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து



(கொழும்பு)

வெலிவேரிய சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை விடுத் துள்ளது. சம்பவம தொடர்பில் பிழையான தகவல்களை வெளியிடுவதனை தவிர்த்து உரிய சுயாதீன விசாரணைகளை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

சுத்தமான குடிநீரை பெற்றுத்தருமாறு கோரி போராட்டம் நடத்திய பொது மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்த பட்சம் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். படையினர் நடத்திய தாக்குதல்களை அரசாங்கம் நியாயப்படுத்தி வருவதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மேற்படிப்புக்கு லண்டன் சென்ற வவுனியா பெண் குத்திக் கொலை




மேற்படிப்பை தொடர்வதற் காக வவுனியாவில் இருந்து லண்டன் சென்ற பெண் லண்டனில் இனந் தெரியாதோரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

2010ஆம் ஆண்டு மேற் படிப்பிற்காக லண்டன் சென்ற தனது மகள் கடந்த 6ஆம் திகதி கூரிய ஆயுதத்தினால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக உயிரிழந்த பெண்ணின் தந்தை தெரிவித்துள்ளார்.

வவுனியா, தவசிகுளத்தைச் சேர்ந்த குணராசா மயூரதி (வயது 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

லண்டன் சென்று அங்கு தங்குவதற்கான விசா அனுமதி பெற்ற நிலையில் அங்குள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடக்கு மாகாண் சபையின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்றைய தினம் முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரமஜயந்த தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் மாகாணசபை வேட்பாளர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட முன்னணியின் ஆதரவாளர்களைக் காணலாம். (படங்கள்-பார்த்திபன்)

## நாய்க்கடியால் உயிரிழந்த பெண்ணின் சடலம் புதைப்பு

(பூநகரி)

பூநகரி நல்லூரில் நாய்க் கடிக்கு இலக்காகி உரிய சிகிச்சை பெறாது மரணமான குடும்பப் பெண்ணின் சடலத்தை புதைக்குமாறு அறிவுறுத்தி உறவினர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்

பூநகரி நல்லூரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான கிருபாகரன் இந்திரவதனி (வயது 37) என்பவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளார்.

நாயால் கடியுண்ட இவர் எதுவித சிகிச்சைகளும் பெறாது இருந்துள்ளார். அத்துடன் குறிப்பிட்டநாயும் உறவினர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 8 ஆம் திகதி இரவு இவர் நாய் போன்று குரைக்க ஆரம்பித்துள்ளார். உடனடியாக இவரை முச்சக்கர வண்டியில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது முச்சக்கர வண்டியையும் கிழித்து சேதப்படுத்த முயன்றுள்ளார்.

கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர் அன்று இரவே மரணமடைந்துள்ளார்.

இவரது மூளைப்பகுதி மற்றும் உடற்பாகங்கள் சில மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் இவரை மருத்துவமனைக்கு எடுத்து வந்தவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நேற்று சடலம் கண்ணாடிப் பெட்டியில் மூடிய நிலையில் இரண்டு மணி நேரத்துக்குள் புதைக்குமாறு கூறி உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு உறவினர்களால் புதைக்கப்பட்டது. (112)


## மின்னல் தாக்குதல்

மின்னல் தாக்குதலில் பனைமரம் ஒன்று சேதமடைந்தமடைந்த சம்பவம் ஒன்று மட்டுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 6.15 மணியளவில் பாரிய மின்னல் ஒன்று பேரிடியுடன் தாக்கியது.

அதிகாலை முதல் மழைபெய்துகொண்டிருந்த நிலையில் மட்டுவில் பகுதியில் உள்ள வெற்றுக்காணியில் நின்ற பனை மரத்தின் மீதே மின்னல் தாக்கியுள்ளது. இதனால் பனை ஓலைகள் எரிவடைந்த நிலையில் காணப்பட்டதுடன் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (இ)

## சுயலாப அரசியல் நடத்துவோரை எம்மத்தியில் இருந்து அகற்றுவோம்



தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி சுயலாப அரசியலை நடாத்திச் செல்ல முனைபவர்களை எம்மத்தியில் இருந்து அகற்ற உறுதிகொள்வோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

அனலைதீவு மணிகண்டான் சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தீவக மக்களின் அபிவிருத்தி மற்றும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஈழ மக்களின் ஜனநாயகக் கட்சி எப்போதும் பின்னிற்கவில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் தீவுப்பகுதி விரைவாக அபிவிருத்தியடைந்து வருகிறது என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

அவ்வாறே யாழ்.மாவட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்து வருகின்றோம். வறட்சி மிகுந்த தீவகப்பிரதேசங்களில் நிலவும் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நிலாவரையில் இருந்து அராலி பிரதேசத்திற்கு குடிநீரை வழங்கும் செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளப் பணித்துள்ளேன். இதனுடன் தீவகத்திலுள்ள குளங்கள் புனரமைப்புச் செய்யப்படுவதுடன நீர்த்தாங்கிகளும் அமைக்கப் படவுள்ளன.

சில போலி அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரங்களுக்காக தீவுப்பகுதிகளில் பிரவேசித்து வெறுமனே வார்த்தைகளை மட்டும் வாக்குறுதிகாளய் மக்கள் மத்தியில் அள்ளிவழங்கி மக்களை ஏமாற்றி விட்டு தமது சுயலாப அரசியலை தொடர்ந்தும் நடாத்திச் செல்லத்தயாரகியுள்ளனர்.

எனவே மக்கள் மத்தியில் நின்று என்றும் மக்களின் துயர் துடைப்பவர்களா அல்லது வீராவேசப் பேச்சுக்களால் மக்களை நரகப்பதையில் நகர வைத்து தமது சுயலாப அரசியலை நடாத்தும் அரசியல் வாதிகளா? மக்களாகிய உங்களின் வாழ்வினை நிர்ணயிக்கப் போகின்றனர என்பதை தீர்மனிக்க வேண்டியவர்கள் நீங்களே. உங்கள் வாழ்விற்காக உங்களின் வாக்குகளை பயன்படுத்துங்கள்.

அத்துடன் தமிழ் மக்களாகிய நாம் இருப்பவற்றை பாதுகாத்துக்கொண்டு இல்லாதவற்றை பெற்றுக்கொள்ளப்போகின்றோமா? அல்லது இருப்பவற்றை இல்லாதொழிக்கப்பபோகின்றோமா என்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை தற்பொழுது வந்துள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி. யின் ஊர்காவற்துறை பிரதேச இணைப்பாளரும் ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளருமான ஜெயகாந்தன் (காந்தன்) ஆகியோர் கலந்துகொண்டனர்.


# நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 177 | திகதி 2013.08.09

வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

ஆங்கில எழுத்து

09 14 57 61 T

பரிசுத் தொகை ரூபா. 10,468,640/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 190 | 190,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 393 | 393,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8380 | 502,800/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4329 | 173,160/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 110138 | 2,202,760/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16015 | 320,300/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 10,468,640/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,082,020/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 10,684,120/-

2013.08.13ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்ளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/2982)

web : www.dlb.lk


## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் கால அலுவலகம் திறப்பு




(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் தேர்தல் கால தலைமை அலுவலகமொன்று நேற்று வேம்படி மகளிர் கல்லூரியின் அருகாமையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால இந்த அலுவலகம் நேற்று பிற்பகல 2 மணியளவில் திறந்து வைக்கபபட் டுள்ளது.

இந்த அலுவலகத் திறப்பு நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின் யாழ்.மாநகர முதல்வர், ஐக்கிய மக்களின் சுதந்திர முன்னணியின் கீழ் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த அலுவலகம் கொழும்பு தலைமைப் பணிமனைக்கும் ஏனைய முன்னணியின் அலுவலகத்திற்குமான தொடர்புகளையும் தகவல்களையும் நெறிப்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)



யாழ். இந்துக் கல்லூரியில் A/L 1988 பிரிவில் பரீட்சையில் தோற்றி பாடசாலை நீங்கிய மாணவர்களின் ஒன்றுகூடல் வெள்ளிவிழா பசுமை நினைவு நிகழ்வுகள் நீர்கொழும்பில் கடந்த 8 ஆம் 9 ஆம் திகதிகளில் நடைபெற்றன. பழைய மாணவர்களும் அவர்கள் தம் மனைவியர் பிள்ளைகளுடன் நிற்பதைக் காணலாம். (90)

## கிளிநொச்சியில் வெளிமாவட்ட மாணவர்கள்
# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதை தடுக்க வழக்கு

வெளிமாவட்ட மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளியைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு வந்து கல்வி கற்று பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகம் புகுவதால் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் இதற்கு தடைவிதிக்குமாறு கோரியும் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்படும் மாணவர்கள் சார்பாக சில மாணவர்களுடன் இணைந்துள்ள ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். கடந்த புதன்கிழமை இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலேயே பல்கலைக் கழகங்களுக்கு பிரவேசிப்பதற்காக குறைந்தளவான வெட்டுப் புள்ளி கிளிநொச்சி மாவட்டத்திற்கே வழங்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை தாங்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக பிற மாவட்டங்களைச் சேர்நத மாணவர்கள் பலர் போட்டி போட்டுக்கொண்டு கிளிநொச்சிக்கு வந்து உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

இதனால், பல வருடங்களாக, யுத்த காலத்திலும் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கிய நிலையில் க.பொ.த உயர்தரப் பரட்சைக்குத் தோற்றுகின்ற கிளிநொச்சியைப் பூர்வீகமாகக் கொண்ட மாணவர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இந்தச் செயற்பாட்டைத்தடுத்து நிறுத்ததடை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கோரியே மேற்படி நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இநத மனுவை ஏற்றுக்கொணட நீதிமன்றம் அடுத்த மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. இந்த விசாரணையின் போது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவரை மன்றுக்கு சமூகமளிக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

இதேவேளை, க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு குறைந்தளவு வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்படுவதால் பிறமாவட்டங்களைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் மற்றும் உயர்பதவிகளில் இருக்கும் அதிகாரிகள் சிலரின் பிள்ளைகளும் அவர்களின் உறவினர்களின் பிள்ளைகளும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளினூடாக க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக் கழகத்திற்குள் நுழைவதாகவும் இதனால் தாங்கள் பாதிக்கப் படவதாகவும் கடந்த சில வருடங்களாக கிளிநொச்சியிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணர்கள் கவலை வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

சுதேச மருத்துவத்துறை அமைச்சின் ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான தகைமை ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தில் ஆயுர்வேத, சித்த, யூனானி மருத்துவம் தொடர்பாக ஐந்து வருட பாடநெறியைக் கற்று, ஒரு வருடகால பயிற்சி நிலைக்கால பயிற்சியை பூர்த்தி செய்து பெற்றுள்ள பட்டப்படிப்பின் பின்னர் ஆயுர்வேத மருத்துவசபையில் பதிவுசெய்யப் பட்டுள்ள மருத்துவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் உடல், உள ரீதியான தகைமைகளுடன் கண் பார்வை திருப்தியாகவும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராகவும், 40 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் அவசியமானதாகும்.

விண்ணப்பிக்கும் இறுதி நாள் 07.09.2013 ஆகும். சம்பள அளவுத்திட்டம், விண்ணப்பப்படிவம், தேவையான ஆவணங்கள் மற்றும் விபரங்களை 08.08.2013 அரச வர்த்தகமானியைப் பார்வையிடலாம். (105)

## தும்பு உற்பத்தி தொடர்பான சர்வதேச மாநாடு இலங்கையில்

உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஒத்துழைப்போடும் உலகில் இயற்கை தும்பு உற்பத்தி செய்யும் நாடுகளின் பங்கு பற்றுதலோடும் இரு வருடங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்படும் சர்வதேச இயற்கை தும்பு, உற்பத்தி தொடர்பான சர்வதேச மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறவிருக்கிறது.

இம்மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறும். நெதர்லாந்தை தலைமையகமாகக் கொண்டியங்கும் அமைப்பே இதனை நடாத்துகின்றது. இம்மாநாட்டின் மூலம் இலங்கையின் தும்பு உற்பத்தியையும், ஏற்றுமதியையும் சர்வதேச தரத்திற்கு ஏற்ப மேலும் மேம்படுத்துவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (105)

## மாணவர்களை சித்தியடைய வைக்க ஒஸ்மானியாக் கல்லூரி அதீத முயற்சி

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி யடைந்துள்ளது. ஆசிரியர்கள் சிறந்த முறையில் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர் என யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் நூலகர் எம்.மிஸ்னூன் கல் லூரியில் நடைபெற்ற ரமழான் அல்குர் ஆன் போட்டியின் பரிசளிப்பு விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இநநிகழ்வில் நூலகர் தொடர்ந்து உரையாற்றும்போது,

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலும், க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையிலும் அதக மாணவர்கள் சித்தியடைய வேண்டுமென்ற அவாவில் மிகவும் சிரமம் எடுத்து ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள்


யாழிலுள்ள பெரிய பாடசாலை போன்று எமது பாடசாலையையும் ஒப்பீடுசெய்ய வேண்டாம். வளர்ந்துவரும் எமது பாடசாலையில் கல்வி கறகும் மாணவர்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை மேற்கொள்ளமுடியாது.

எமது மக்கள் மீள்குடியேறி பல்வேறு கஷ்டங்களுடன் வாழ்கின்றனர். இந்நிலையியல் மாணவர்களின் முழுத்தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது சப்பாத்து இல்லாமலும் வருகின்றனர். இவர்களை பாடசாலையை விட்டு வெளியேற்றினால் கல்விகற்க வராமல் கூலிவேலைக்குப் போய் உழைக்க முற்படுவார்கள்.

இதனால் சிறார்களின் கல்வி பாதிப்படையும். எனவே பெற்றோர்கள் அடிக்கடி பாடசாலைக்கு வருகை தந்து மாணவர்களின் கல்வி நிலையை அறிந்து கொள்ள வேண்டும் என உரையாற்றும்போது தெரிவித்தார்.

இப் பரிச்ளிப்பு விழாவில் உலமாக்களும், பிரமுகர்களும் வருகை தந்து மாணவர்களுக்குரிய பரிசுகளை வழங்கினார்கள். (105)



மாதகலில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் மாதகல் சங்கமித்த விகாரையில் இருந்து கிடைக்கும் நிதியில் இருந்து வறுமைக் கோட்டிக்குட்பட்ட நன்றாக கல்விகற்கக்கூடிய இருபது மாணவ மாணவிகளை தெரிவு செய்து மாதாந்தம் எழுநாற்றி ஐம்பது ரூபா நிதி கல்வீக்கான உதவியாக வழங்கி வருகின்றார்கள். அந்த நிகழ்வின் பதிவுகளை இங்கே காணலாம்.

## சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு

(அச்சுவேலி)

தம்பாலை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் சனசமூக நிலைய முன்றலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உறுப்பினரும் இணை அமைப்பாளருமான கி.செல்வராசா (லிங்கேஸ்) சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதில் சனசமூக நிலையத் தலைவராக ஜெ.ஜெயதரனும், செயலாளராக த.சுதர்சனும், பொருளாளராக தீபனும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.குகதீசன், ஜெ.ஜெநிசாந்தன், ஜெ.ஜெயசுஜீபன், ம.கரன் ஆகியோர் தெரிவு செய்யபபட்டுள்ளனர். (85)

நீ எந்நிலையில் இருந்தாலும் கடந்து வந்த பாதைகளை மறந்துவிடாதே... - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வெறுப்பை வளர்த்து வாக்குகள்!

இவ்வளவு மக்களை அழித்து முடித்து மீதிப்பேரை நிர்க்கதி அவலங்களுக்கும் ஆளாக்கி விட்டிருக்கும் நிலையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் வெறுப்பை வளர்த்தும், வீரவசனங்களால் மக்களை ஏமாற்றியுமே வாக்குகளைப் பெற நினைக்கிறார்கள் என்பது துக்ககரமானதுதான்.

பாடசாலைச் சிறார்கள் மத்தியிலும் போய் வாக்குகளுக்காக வன்முறை உணர்வைத் தூண்டும் பேச்சுக்கள் பேசுகிறவர்களே தமிழ்மக்களுக்குத் தலைவர்களாக வாய்த்ததை என்ன சொல்ல? இவ்வளவு அனுபவங்கள் பட்டறிவுகளுக்குப் பிறகும் எப்படி வெற்று மாயைகளை வீரம் கலந்து விசிறியடித்துக்கொண்டிருக்க முடிகிறது? இவர்களிடமிருந்து தப்பி, வன்முறைச் சுழலிலிருந்து எமது சமூகம் வெளியே வருவது எப்படி?

எண்ணினால் மலைப்பாக இருக்கிறது. அதிகார விருப்பங்களுக்காகவும், குறுகிய லாபங்களுக்காகவும் மக்கள் மனங்களில் ஊட்டப்படும் இந்த இனவாதமும் வெறுப்பும் விரோதமுமான நஞ்சு அவர்களை மீண்டும் எங்கு கொண்டுபோய் விடும்? நடந்து முடிந்த அவல வரலாற்றை மீண்டும் அதே கதை, வசனங்களுடன் நடத்த முற்படுவதை வெறுமே பார்த்துக் கொண்டிருப்பதைத் தானா நமது அறிவுச்சமூகத்தினரும் தொடர்ந்து மேற்கொள்வார்கள்?

மக்களைப் பிரித்து பூமிப்பரப்பில் செயற்கையாக வரையப்படும் எல்லைக்கோடுகளால் ஏற்படும் சமூகப் பிளவுகளும், வன்முறையும், மனித அவலமும் பற்றி சர்வதேச ரீதியில், உண்மையான மனித அக்கறை கொண்டிருக்கும் அறிஞர்கள் ஆய்ந்து கவலை வெளியிட்டு வருகிறார்கள். அதன் விளைவுகள் பற்றியெல்லாம் தெளிவாக எடுத்துரைத்து வருகிறார்கள்.

தேச, இன, மொழி, சாதி, மதம் போன்றவற்றின் மீதான அபிமானமானது பாசிஸமாக வளர்ந்ததே நம் காலத்திய வரலாறாக இருக்கிறது. சமத்துவம், பல்கலாசாரம் போன்றவற்றை மறுக்கும் ஒடுக்குமுறைத்தன்மை கொண்டதாக அது மாறுகிறது.

தேசத்தை உருவாக்குவதற்கான தேசியவாதத்தை முன்னெடுப்பவர்கள் மற்றவர்கள் மீதான வெறுப்பைக் கட்டியெழுப்புவதனூடாகவே தேசியத்துக்கான ஒருங்கிணைவைச் சாதிக்கின்றனர். ஒருங்கிணைக்கப்பட்ட அந்த மக்களின் குருதியால் எல்லைக் கோட்டினை வரைந்து பிளவாக்கும் கனவில், வெறுப்பு மூட்டும் ஆவேசப் பேச்சுக்களால் மக்களைக் கொந்தளிக்க வைத்தபடி இருக்கிறார்கள். அவர்களது அரசியல் லாபத்திற்கு இவ்வாறு தீவிர உணர்ச்சியால் திரளாக்கப்படும் மக்கள் தேவை.

மற்றவற்றை மறுப்பதன் மூலமும் வெறுப்பதன் மூலமுமே இந்த ஒருங்கிணைவு உண்டாக்கப்படுகிறது. இந்தக் கருத்தியலின் பிரதான குணமே சமூக முரண்பாடுகளையும் எதிர் தரப்புகளையும் மறுப்பதாக இருக்கும். அந்த மறுப்பை வன்முறையினால் நிலைநாட்டுவதில் சென்று முடியும்.

நம்முடைய இன, மொழி, தேசிய உணர்வுகளைக் கூர்தீட்டிவிடும் பேச்சுக்களிலிருந்தே பிறவற்றின் மீதான மறுப்பும் வன்முறை உணர்வும் வளர்த்துவிடப்படுகிறது. இந்த எல்லைக் கோடுகளை நமக்குள் போட்டு வைத்துக்கொண்டு அதனுள்ளேயே இருப்பதன் மூலம் நாம் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்கிறோம். ஆனால் உண்மையில் இந்தப் புனித எல்லைக்கோடுகள் யாவும் மனிதகுலத்துக்குத் தீங்கு விளைவிப்பவையாகவே உள்ளன என்றும் நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புரிந்துகொண்டே வருகிறோம். இருந்தாலும் நம்மை மாற்றிக்கொள்ள எண்ணுவதில்லை அல்லது விடுவதில்லை.

சமூகமும் இந்தத் தலைவர்கள் எனப்படுவோரும் நம் மூளையில் திணிக்கின்ற அனைத்து விஷயங்களைப் பற்றியும் நாம் வேறோர் கோணத்திலிருந்து பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழர்கள் என்ற அடையாளத்தை நாம் எல்லையற்ற நேயத்தின் வழியேதான் அடைய முடியுமே அல்லாமல், இரத்தக் களரியினாலும் வெறுப்பினாலும் இணக்கமறுப்பினாலும் அல்ல.

– ஆசிரியர்

# தென்னிந்திய சுற்றுலாப்பயணிகள் வடக்கு நோக்கி படையெடுப்பு

## மர்மம் துலக்குகிறது அதிரடிப்படை

(கொழும்பு)

இறுதி யுத்தம் இடம்பெற்ற முல்லை மாவட்டத்துக்கு தென்னிந்தியச் சுற்றுலாப் பயணிகள் படை எடுத்துச் செல்வதன் மர்மம் என்ன என்று விசேட அதிரடிப்படையினர் பகுப்பாய்வுப் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் இந்திய உளவாளிகள் ஊடுருவியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுற்றுலா விசாக்களின் மூலம் நாட்டுக்குள் பிரவேசித்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சஞ்சரித்து இவ்வாறு உளவுத் தகவல்கள் திரட்டப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த உளவாளிகளே இவ்வாறு குறிப்பாக, வட பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாக விசேட அதிரடிப்படையின் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வடக்கு, கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பும் நோக்கில் இவ்வாறு குறித்த நபர்கள் உளவுத் தகவல்களை திரட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர். பாதுகாப்புத் தொடர்பான தகவல்கள் பொதுமக்களிடமிருந்து திரட்டப்படுகின்றது. அறுவடை செய்தல், நாற்று நடுதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் போர்வையில் உளவுத் தகவல்கள் திரட்டப்படுகின்றன. விசாக் காலம் முடிவடைந்தும் இவர்கள் நாட்டில் தங்கியிருக்கின்றனர்.

# வெலிவேரிய சம்பவத்துக்காக மானசீகமாக வருந்துகிறேன்

## அமைச்சர் பசில் மனந்திறந்து பேசுகிறார்

(கொழும்பு)

வெலிவேரிய சம்பவம் யாரும் எதிர்பார்க்காத மிகவும் துரதிஷ்டமானது இச்சம்பவத்துக்காகவும், இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் நான் மானசீகமாக வருத்தமடைகிறேன் என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துரதிஷ்டவசமான சம்பவம் குறித்து நான் உண்மையில் கவலையடைகின்றேன். இந்தச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

முக்கியமாக உயிர்களை இழந்தவர்கள், ஊடகவியலாளர்கள், இடையூறுகளை எதிர் நோக்கியவர்களுக்காக கவலை தெரிவிப்பதுடன், அவர்களிடம் மன்னிப்பும் கோருகின்றேன் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

வெலிவேரிய பிரதேசத்தில் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஊடகம் ஒன்று அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதனைத் தவிர்க்க முடிந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவ்வாறு நடந்திருந்தால், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அதிகளவில் நான் முயற்சிகளை எடுத்திருப்பேன். எனினும், உடனடியாக இந்தச் சம்பவம் நடந்து விட்டது. இராணுவத்தினருக்கு நடவடிக்கை எடுக்காது தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கலாம். எனினும், இப்படியான சம்பவங்களின் போது அரச மற்றும் மக்கள் தரப்பினர் குறித்து சிந்தித்து செயற்பட வேண்டும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## தஞ்சம் கோரும் இலங்கையர்கள் சுவிஸர்லாந்தில் அதிகரிப்பு

(ஜெனிவா)

சுவிஸர்லாந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையர்களின் எண்ணிக்கை மீண்டும் அண்மை மாதங்களில் அதிகரித்துள்ளது. கடந்த ஆறுமாத காலத்தில் ஆயிரத்து 990 இலங்கைப் பிரஜைகள் சுவிஸர்லாந்து அரசாங்கத்திடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 30 ஆம் திகதி வரை அந்த நாட்டில் அரசியல் தஞ்சம் கோரிய இலங்கையர்களில் 20 பேர் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்களில் சிலர், நேபாளம் ஊடாக இத்தாலி சென்று அங்கிருந்து சுவிஸர்லாந்து சென்றுள்ளனர். இராணுவத்தினர் மற்றும் பல்வேறு குழுக்களிடம் இருந்து வரும் அச்சுறுத்தல்களைக் காரணமாகக் காட்டி இவர்கள் சுவிஸர்லாந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். அரசியல் தஞ்சம் கோருபவர்களில் தாய், தந்தை, மகன் உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் அடங்குவதாகத் தெரிய வந்துள்ளது.

# புலிகளின் முகாமில் புதையல்; தோண்டி எடுக்கும் முயற்சி தோல்வி

## எட்டுப்பேர் கைது, மேலும் பலர் தப்பியோட்டம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்ட கௌசல்யனின் முகாம் அமைந்திருந்ததாகக் கூறப்படும் பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்தவர்களில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் தப்பி ஓடி விட்டனர்.

அதில், தொல்பொருள் திணைக்களத்தினைச் சேர்ந்தவர்கள் நால்வர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய நால்வர் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுப்பகுதியில் புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர். தொல்பொருள் திணைக்களத்தின் சிரேஷ்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளரான சுனேத்திர நலிந்த சில்வா, தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏரந்த மாரம்ப சில்வா, பெண் உதவியாளர் லசித்தா மாலிரத்நாயக்க, சாரதி அருணா சாந்த ஆகியோரே விடுவிக்கப்பட்டுள்ளனர். கொழும்பைச் சேர்ந்த வீரசேகர, குலோத்துங்க பண்டார, மடுல் சீமையைச் சேர்ந்த சுப்பிரமணியம் புவனேசன் மற்றும் காணிச் சொந்தக்காரர் என்று தெரிவிக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த சிவகுரு சற்குணம் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, மட்டக்களப்பு சத்துருக்கொண்டானைச் சேர்ந்த சிவருகு சற்குணம் என்பவருக்குச் சொந்தமான காணி ஒன்று மடுப் பிரதேசத்தில் உள்ளது.

வீட்டுடன் உள்ள பத்து ஏக்கர் காணியில் தங்களது நகைகள் உள்ளிட்ட பொருட்கள் யுத்தத்திற்கு முன்னர் இருந்ததாகவும், தற்போது அப் பொருள்கள் எங்கிருக்கின்றன என்பதைக் கண்டறிந்து தருமாறு தொல்பொருள் திணைக்களத்திடம் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்தது. காணிக்கு சொந்தக்கார் எனக் கூறப்படும் சற்குணம் என்பவரின் நண்பரான ஆட்பதிவுத் திணைக்களத்தில் தொழில் புரியும் வீரசேகர ஊடாகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டது.

அவருடன் அவரது நண்பர்கள் இருவரும் இணைந்து தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட தொல்பொருளியலாளருடன் இப்பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இப்பிரதேசத்தில் வேறு பிரதேசத்தவர்களின் நடமாட்டத்தினை அவதானித்த பொதுமக்கள் இது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

■ சங்கர சிவன்




# இன்னொரு அழிவை நோக்கி கூட்டமைப்பின் அரசியல் பயணம்

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னொரு தடவை தமிழ் மக்களின் துயரங்களைப் பட்டியல் போடுவதோடு சர்வதேச சமூகம் பற்றியும் பேசப்போகின்றது என்று எதிர்வு கூறுவதொன்றும் அதிசயமானதல்ல. அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாகத் தமிழ்த் தலைவர்கள் மக்களின் துயரங்களைப் பட்டியல் போடுவதன் மூலமே அரசியலில் நிலைத்து நிற்கின்றார்கள். சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று நான்கு வருடங்களாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறி வருகின்ற போதிலும் சர்வதேச சமூகம் பிரச்சினையின் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் பற்றி உணர்ச்சியூட்டும் பிரசாரங்களைச் செய்து வருகின்ற தமிழ்த் தலைவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலாவது எந்தப் பிரச்சினைக்காவது தீர்வைப் பெற்றுக் கொடுத்ததாக உரிமை கோரி வாக்குக் கேட்ட வரலாறு இல்லை. துன்ப துயரங்களைப் பட்டியல் போடுவது வாக்குகள் பெறுவதற்குப் போதுமானது என்று இவர்கள் கருதுவதால் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதில்லை.

வடமாகாணத்தில் இராணுவத்தின் வசமுள்ள காணிகள் தொடர்பான போராட்டம் இதற்கு நல்ல உதாரணம். பொதுமக்களின் காணிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நடந்த போராட்டங்களை உதாரணமாகக் கூறலாம். மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டங்களைச் செய்வதற்கு அப்பால் சுண்டு விரலைக்கூட இத்தலைவர்கள் அசைக்கவில்லை. பிரச்சினையின் தீர்வுக்காக உரியவர்களுடன் பேசுவது மினைக்கெட்ட வேலை என்பதும் ஆர்ப்பாட்டங்களின் மூலமே வாக்குகளை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்பதும் இத்தலைவர்களின் நிலைப்பாடு.

வேறு யாராவது உரியவர்களுடன் பேசி ஓரளவு தீர்வைப் பெறுவதை இவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரியவர்களுடன் பேசியதன் விளைவாக அண்மையில் சில பிரதேசங்களில் பொதுமக்களின் காணிகளிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறியது. இந்த முயற்சியைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஏனைய காணிகளிலிருந்து ஏன் இராணுவம் வெளியேறவில்லை என்று கேள்வி கேட்கிறது கூட்டமைப்பு.

எந்தப் பிரச்சினையையும் விட்டால் குடுமி வழித்தால் மொட்டை என்று அணுக முடியாது. படிப்படியாக இலக்கை அடைவதே ஆக்கபூர்வமான அணுகுமுறை. காணிப்பிரச்சினை இதற்கு விதிவிலக்கல்ல. இந்தக் காணிகளிலிருந்து இராணுவம் வெளியேறியதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் விரும்பவில்லையா என்ற கேள்வி எழுகின்றது. இராணுவம் அந்தக் காணிகளிலிருந்து வெளியேறாமலிருந்தால் தான் மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டம் செய்ய வசதியாக இருக்கும் என்று கருதுகின்றார்களோ தெரியவில்லை.

காணிப் பிரச்சினையைப் போலவே மக்களின் துயரங்களையும் அரசியல் மூலதனம் ஆக்குவதில் கூட்டமைப்புத் தலைவர்கள் கெட்டிக்காரர்கள். மக்களின் துயரங்களுக்குக் காரணமானவர்களும் இவர்களே. அந்தத் துயரங்களில் அரசியல் இலாபம் தேடுபவர்களும் இவர்களே.

முப்பது வருட கால யுத்தத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த இழப்புகளும் அழிவுகளும் ஏராளம். இதற்குக் காரணமானவர்களைத் தமிழ் மக்கள் தண்டிக்க வேண்டும் எனக் கூறும் தலைவர்கள் தாங்களே அந்தத் தண்டனைக்கு உட்பட வேண்டியவர்கள் என்பதை வசதியாக மறந்து விடுகின்றனர்.

இராணுவத்தின் செயற்பாடுகளைப் பற்றிக் கூறும் தமிழ்த் தலைவர்கள் அதற்கு அப்பால் செல்ல விரும்புவதில்லை. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு அடிப்படையான காரணம் இத்தலைவர்கள் எடுத்த பிழையான அரசியல் முடிவு என்பதை இவர்கள் மூடிமறைத்தே தங்கள் பிரசாரங்களை முன்னெடுக்கின்றார்கள்.

**இராணுவத்தின் செயற்பாடுகளைப் பற்றிக் கூறும் தமிழ்த் தலைவர்கள் அதற்கு அப்பால் செல்ல விரும்புவதில்லை. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு அடிப்படையான காரணம் இத்தலைவர்கள் எடுத்த பிழையான அரசியல் முடிவு என்பதை இவர்கள் மூடிமறைத்தே தங்கள் பிரசாரங்களை முன்னெடுக்கின்றார்கள்.**

நடைமுறைச் சாத்தியமற்றதும், மக்களுக்கு அழிவுகளைத் தவிர வேறு எதையும் தராததுமான தனிநாட்டுத் தீர்மானத்தைத் தமிழ்த் தலைமை எடுத்ததே தமிழ் மக்கள் முகங்கொடுத்த அழிவுகளுக்கும், இழப்புக்களுக்கும் அடிப்படையான காரணம். நாடாளுமன்ற ஆசனம் என்ற சுயநல நோக்கத்துக்காகத் தூர நோக்கு இல்லாமல் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியதும் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்பட்டதுமே தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கான

**தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் பற்றி உணர்ச்சியூட்டும் பிரசாரங்களைச் செய்து வருகின்ற தமிழ்த் தலைவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலாவது எந்தப் பிரச்சினைக்காவது தீர்வைப் பெற்றுக் கொடுத்ததாக உரிமை கோரி வாக்குக் கேட்ட வரலாறு இல்லை. துன்ப துயரங்களைப் பட்டியல் போடுவது வாக்குகள் பெறுவதற்குப் போதுமானது என்று இவர்கள் கருதுவதால் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதில்லை.**

காரணம். இப்படியான பிழையான வழியில் செல்லாமல் நிதானமாகச் செயற்பட்டிருந்தால் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் உயிரிழப்பைத் தவிர்க்க முடிந்திருக்கும். கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான சொத்துகளின் அழிவைத் தவிர்க்க முடிந்திருக்கும். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பிரதேசங்களிலிருந்து தமிழ் மக்கள் வெளியேறியதைத் தவிர்க்க முடிந்திருக்கும்.

எனவே, தமிழ் மக்களின் இழப்புகளுக்கும், வேதனைகளுக்கும் இன்றைய அவல நிலைக்கும் தமிழ்த் தலைவர்கள் சம அளவில் பொறுப்பேற்க வேண்டும். இந்த அவலங்களுக்குக் காரணமானவர்களைத் தமிழ் மக்கள் தண்டிக்க வேண்டுமானால் தமிழ்த் தலைவர்களும் அந்தப் பட்டியலில் அடங்குகின்றார்கள். மக்களின் அவலங்களுக்கு இத்தலைவர்கள் காரணமாக இருந்தது மாத்திரமல்லாமல் தமிழ் மக்களை மீண்டும் அவலத்தை நோக்கி அழைத்துச் செல்ல முயற்சிக்கின்றார்கள்.

இனப்பிரச்சினையே இன்று தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தான் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான வழி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கத்துடன் செயற்படவில்லை. அரசியல் தீர்வு காண்பதற்குச் சாதகமான சகல விடயங்களையும் கூட்டமைப்புத் தலைவர்கள் நிராகரித்து வருகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முதலாவது தேவை தீர்வுத் திட்டம். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை. ஏதாவது சாட்டுப்போக்குச் செல்லித் தீர்வுத் திட்டம் முன்வைப்பதைத் தவிர்த்து வருகின்றது.

இனப்பிரச்சினையின் தீர்வுக்காக அரசாங்கம் நியமித்திருக்கும் தெரிவுக் குழுவைக் கூட்டமைப்புத் தலைவர்கள் நிராகரிக்கின்றார்கள். இதற்கு அவர்கள் கூறும் எந்தக் காரணமும் பொருத்தமானதாக இல்லை. தெரிவுக் குழுவுக்குச் சென்று தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைப்பதன் மூலம் தமிழ் மக்கள் இழக்கப்போவது எதுவுமில்லை. அரசியல் தீர்வில் உண்மையான அக்கறை உள்ளவர்கள் அதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதற்குக் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் தவறவிடக் கூடாது. இவர்களிடம் அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகள் எதுவும் இல்லை. அதுதான் தெரிவுக் குழுவுக்கு இவர்கள் செல்ல மறுப்பதற்கான உண்மையான காரணம்.

அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக மாகாணசபையை ஏற்றுக் காலப் போக்கில் படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று அரசியல் தீர்வை அடையலாம் என்று முன்வைக்கப்படும் யதார்த்தபூர்வமான ஆலோசனையையும் கூட்டமைப்புத் தலைவர்கள் நிராகரிக்கின்றார்கள். மாகாண சபையின் அதிகாரத்தை அரசியல் தீர்வுக்காகப் பயன்படுத்த இவர்கள் விரும்பவில்லை.

கூட்டமைப்புத் தலைவர்களின் செயற்பாடுகள் அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருப்பதை விளங்கிக் கொள்ளலாம். ஏன் இவர்கள் அரசியல் தீர்வைத் தவிர்க்கின்றார்கள் என்ற கேள்வி மக்களிடம் எழலாம்.

தனிநாட்டு மாயையிலிருந்து இன்னும் விடுபடாத புலம் பெயர் அமைப்புகளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனையும் நிதியுதவியும் வழங்கி வருகின்றன. இந்தப் புலம்பெயர் அமைப்புகளின் ஆலோசனைக்கு அமைவாகவே கூட்டமைப்பு செயற்படுகின்றது. அதனால்தான் புலம் பெயர் மக்களின் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். இந்தப் புலம் பெயர் அமைப்புகள் அரசியல் தீர்வை விரும்பவில்லை. தனிநாட்டு இலக்குடனேயே செயற்படுகின்றன. புலம் பெயர் அமைப்புகளின் ஆலோசனைக்கு அமைவாகவே கூட்டமைப்பு அரசியல் தீர்வைத் தவிர்த்து வருகின்றது. இது தமிழ் மக்களை மீண்டும் அழிவுகளையும் அவலங்களையும் நோக்கி அழைத்துச் செல்லும் செயல். ●

# வெலிவேரியத் தாக்குதல் ; கத்தோலிக்க திருச்சபை கண்டனம்



(கொழும்பு)

வெலிவேரியாவில் சுத்தமான குடிநீருக்காகப் போராட்டம் நடாத்திய மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடாத்தியபோது, கத்தோலிக்க தேவாலயம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது தொடர்பில் தேவாலய நிர்வாகம் காலம் தாழ்த்தி குற்றச்சாட்டை முன்னைத்துள்ளது.

கொழும்பின் புறநகர்ப் பகுதியிலுள்ள வெலிவெரியக் கிராமத்தில் இராணுவத்தினர் கடந்த வியாழனன்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் மரணமடைந்ததுடன், மேலும் 50 பேர் காயமடைந்தமை தொடர்பில் வழமைக்கு மாறாக கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் மல்கம் றஞ்சித் இப்போது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பிப்பதற்காக தேவாலயத்திற்குள் அடைக்கலம் புகுந்த மக்கள் மீது தாக்குதல் நடாத்தியதன் மூலம் தேவாலயத்தின் புனிதத்தைக் களங்கப்படுத்தியதாக கர்தினால் மல்கம் றஞ்சித் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புனித அந்தோனியார் தேவாலயத்தில் அடைக்கலம் புகுந்து கொண்ட மக்கள் மீது இராணுவத்தைச் சேர்ந்த சிலர் மேற்கொண்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான மீறல்களை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்காக தமது அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துவதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் எனவும் கர்தினால் மல்கம் றஞ்சித் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெலிவேரிய வன்செயலின் பின்னணி என்ன? மூக்கை நுழைக்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

வெலிவேரியத் தாக்குதல் சம்பவம் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சதித்திட்டமா என்றும் இதன் பின்னணி என்ன என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது அதீத கவனத்தை இவ்விடயத்தில் செலுத்தியுள்ளது.

மூன்று பேரின் உயிரிழப்பிற்கு காரணமான வெலிவேரிய துபபாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் தாம் கரிசனை செலுத்தியுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு உள்ள உரிமைக்கு மதிப்பளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் வலியுறுத்துவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஜென் சாகி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அமெரிக்கா அரசாங்கத்திற்கு விநயமாகக் கோரியுள்ளது.

அத்துடன் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு அமெரிக்கா தனது அனுதாபத்தை தெரிவிப்பதாகவும் ஜென் சாகி குறிப்பிட்டுள்ளார்.

## யானைகளின் பதிவேடு மாயம் நாசவேலையின் தொடக்கமா?

வன பரிபாலன திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த தனியாருக்கு சொந்தமான யானைகளின் பதிவுகள் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவு திணைக்களத்தின் சட்டப்பிரிவின் பிரதி இயக்குனர் சந்தினி வில்சனினால் பேணப்பட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக பிரதி இய்க்குனர் சந்தினி வில்சன் எமது செய்தி சேவைக்கு கருத்துத் தெரிவிக்கையில் காணாமல் போன பதிவினால் பாதிப்பு எதுவும் இல்லை எனத் தெரிவித்தார்.

இது தொடர்பான விபரங்கள் வேறு கோர்வையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எமது செய்திப் பிரிவு அமைச்சர் காமினி விஜித விஜயமுனி சொய்சாவுடன் தொடர்புகொண்ட வினவியபோது, இந்தப் பதிவேடு களவாடப்பட்டிருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாக தெரவித்தார்.

இந்த விடயம் குறித்து தாம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். எப்படியிருப்பினும் சில விஹாரைகள் மற்றும் சில பிரபலங்கள் வசமுள்ள யானைகள் குறித்து பதிவுகள் இல்லாதிருப்பதாக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இவர்களுக்கும் பதிவேட்டு காணாமல் போன சம்பவத்திற்கும் தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## பால்மாவுக்கு விலை அதிகரிக்காது வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட சில பால்மாக்களில் நச்சு இரசாயனம் இருப்பதாக கூறப்படுவதனால் ஏனைய பால்மாக்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக வெளியான செய்தியை நுகர்வோர் விவகார அதிகாரசபை மறுத்துள்ளது. பால்மாவின் விலையை அதிகரிக்க வேண்டுமென பால்மா கம்பனிகள் விடுத்த வேண்டுகோள்களை மேற்படி அதிகார சபையின் விலைக் கட்டுப்பாட்டுச் சபை நிராகரித்துவிட்டதென அவ்வதிகாரசபையின் தலைவர் றூமி மர்ஸூக் கூறினார்.

கடந்த மூன்று மாத காலத்தில் கேள்வி அதிகரித்தமையால் தமது மாத வருமானம் 75 மில்லியன் ரூபாவிலிருந்து 130 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என உள்நாட்டு பால்மா உற்பத்திக் கம்பனியான மில்கோ கூறியுள்ளது.

பால்மா நுகர்வு பற்றிய பிரச்சினை காரணமாக தமது உற்பத்திகளின் கேள்வி அதிகரித்துள்ளதாக மில்கோ தலைவர் சுனில் விக்கிரமசிங்க கூறினார். மில்கோ நிறுவனமானது நாளொன்றுக்கு 210,000 லீற்றர் பாலை உற்பத்தி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கோடீஸ்வரர் சியாம் கொலை வாஸ்குணவர்த்தனவின் மகன் சிறையில்

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வரத்தகர் சியாம் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் க்கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தனவின் மகன் ரவிந்து குணவர்த்தனவை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரவிந்து குணவர்த்தன பெப்பிலியான பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டார் அவரை 24 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

இந்நிலையில், கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்தபோது அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை புதன் கிழமை வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## மரணதண்டனை விதிப்பதில் சாதனை ஆறு மாதத்தில் 75 பேருக்கு தீர்ப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் 75 பேருக்கு பல்வேறு நீதிமன்றங்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 1080 பேர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமணமான பெண்ணுடன் கள்ளத் தொடர்பு பேணியமை, காணிப் பிரச்சினை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம், மது போதை, போதைப்பொருள் பயன்பாடு போன்ற காரணிகளினால் ஏற்பட்ட முரண்பாடுகளில் கொலைகளை மேற்கொண்டவர்களும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் வைத்திருத்தல் ஆகிய காரணங்களுக்காகவும் அதிகளவானவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதிகளவான மரணதண்டனைக் கைதிகள் வெலிக்கடை மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## குழந்தைகள் சாவு விசாரணை ஆரம்பம்

ஹப்புத்தளை பிற்றரத்மலை கீழ் மற்றும் மேல் பிரிவுகளில் ஒரேநேரத்தில் இரண்டு குழந்தைகள் இரண்டு வெவவேறு கிணறுகளில் வீழ்ந்து மரணமான சம்பவங்கள் தொடர்பில் ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஒன்றரை வயதான கி.சதுர்குமார் மற்றும் 2 வயதான சௌ.சதுர்ஷன் ஆகிய குழந்தைகளே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவங்களில் உயிரிழநதன. உயிரிழந்த குழந்தைகளின் சடலங்கள் தற்போது ஹப்புத்தளை மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன இது தொடர்பான மரண பரிசோதனைகள் ஏறகனவே நடைபெற இருப்பதாக பொலிஸ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

## வாக்காளர் அட்டை பகிர்வு கண்காணிப்பு கமராவில் பதிவு

### மோசடிக்கு இடமில்லை


(கொழும்பு)

இந்த முறை மாகாணசபை தேர்தலின் பொருட்டு வாக்கட்டைகளை பகிர்ந்தளிக்க விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக, அரசாங்க அச்சக தாதிபதி லலித டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த நடவடிக்கையின் பொருட்டு காவல்துறையினருக்கு மேலதிகமாக சி சி டி வி கமராக்களும் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, தகவல் தெரிவிக்கையில், வாக்கட்டைகள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை என தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் வாக்கட்டை பகிர்ந்தளிக்கும் பணியில், காவற்துறையினர் இணைத்துக் கொள்ளப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தினார்.



உலக ஆதிவாசிகள் தினத்தை முன்னிட்டு தெஹியத்தகண்டி, ஹேனானிகல கிராமத்தில் நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதிவாசிகளின் தலைவர் ஊறுவரிகே வன்னிலா அத்தோ வரவேற்றார். இவ்வைபவத்தின் போது ஆதிவாசிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்களும் வாழ்வாதாரப் பொதிகள் போன்றன ஜனாதிபதியால் கையளிக்கப்பட்டன. இவ்வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# வடக்கில் 2 நாட்கள் தொடர் மழை சிறுபோக நெல் அறுவடை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் கிழ் நெற் பயிர்ச் செய்கைப்பண்ணப்பட்ட வயல்களில் தற்சமயம் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு ள்ளது. இந்நிலையில் நெல் அறுவடை காலத்தில் மழை குறுக்கிட்டிருப்பதனால் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

சில விவசாயிகள் முன் கூட்டியே அறுவடை செய்தமையினால் பாதிப்பில் இருந்து தப்பியது அறுவடைசெய்யாத விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. மழை நீர் அறுவடை நேரத்தில் வயல் நிலங்களில் தேங்குவதனாலும் நெற்பயிர்கள் நீரில் சரிந்து வீழ்ந்து காணப்படுவதனாலும் நெல் அறுவடை இயந்திரங்களை வயலில் இறக்கி அறுவடை செய்வதிலும் கஸ்டநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கி ன்றனர். இதேவேளை வெங்காயம் போன்ற உபஉணவுப்பயிர்ச் செய்கையும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அறுவடை நேரத்தில் மழைநீர் தேங்கி நிற்பதன் காரணமாக அவை அழுகி அறுவடை பாதிக்கும் நிலையம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

## "சிரமம் பாராது வாக்களியுங்கள்" காரைநகரில் தெருக்கூத்து



காரைநகர் பகுதியில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இலங்கை மனித உரிமைகள் இல்லத்தினால் தெருக்கூத்து நடத்தப்பட்டு வருகின்றது.


வாக்காளர் இடாப்பில் பெயர்கள் ஏன் பதியப்பட வேண்டும் எனனும் கேள்விக்குப் பதிலாக இத்தெருக்கூத்து அமை கிறது. ஆரம்பபாடசாலைகள் தொடக்கம் சகலகல்வித் தேவைகளுக்கும், தொழில் வாய்ப்பினை பெறுவதற்கும் தேர்தலில் வாக்களிப்பதற்கும் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கும் ஏனைய அரச தேவைகளுக்கும் உங்கள் பெயர்களை உங்கள் பகுதி வாக்காளர் இடாப்பில் கட்டா யமாக பதியப்பட வேண்டும். என் பதனை வலியுறுத்தி தயவு செய்து சிரமம் பாராது வாக்களியுங்கள் என்ற தொனிப்பொருளில் தெருக்கூத்து நடத்தப்பட்டு வருகின்றது. (50)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவினால் 50 அதிகாரிகளுக்கு பதவி உயர்வும்,புதிய நியமனங்களும் வழங்கப்பட்டன. இந் நியமனக்கடிதம்வழங்கும் வைபவம் கடந்த வாரம் தெங்கு பயிர்ச் செய்கை சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.மக்கள் சேவையை மேலும் செயல்திறன் மிக்கதாக்குவதற்காக அமைச்சர் பல்வேறு நடவடிக்கையை மேற் கொண்டுள்ளார்.

புதிய நியமனம் பெற்றவர்களும்,பதவி உயர்வு பெற்றவர்களும் மகிழ்ச்சியடைவதுடன் தமது பொறுப்புக்கள் திறம்பட மேற்கொள்வதுடன் எமது நிறுவனத்தை மேம்பாடடையச் செய்து இலாபகரமான பயன்களை பெற்றுக்கொடுக்க வேண்டுமென அமைச்சர் ஜகத் புஷ்பகுமார கேட்டுக்கொண்டார். (105)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் அம்மன் வருடாந்த ஆடித்திருவிழா உற்சவ தேர்த் திருவிழாவின் போது அம்பாள் தேரில் எழுந்தருள்வதற்காக அலங்கரிக்கப்பட்டு ஆலயத்தில் இருந்து வெளியே வந்து கொண்டிருப்பதையும்,பக்தர்களுக்கு அம்மன் தேரிலிருந்து அருள் பாலித்துக்கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்... (50)

## இருவியாபாரிகளுடன் இயங்கும் வரணி பொதுச்சந்தை

(வரணி)

வரணி மக்களின் உயிர் நாடியாக கடந்த காலத்தில் விளங்கிய வரணி பொதுச்சந்தை தற்போது பின்தங்கிய நிலையில் இரண்டு வியாபாரிகளுடன் இயங்குகின்றது. 2006ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலுக்கு முன்பு ஓரளவு வியாபாரிகள் மற் றும் வடமராட்சி தேங்காய் வியாபாரிகளால் நிறைந்து காணப்பட்ட சந்தை தற்போது இந்தப் பரிதாப நிலையில் காட்சி அளிக்கின்றது. தேங்காய்க்கு பெயர் போன வரணிச்சந்தை 30 வருடங்களுக்கு மேல்மாலை நேரச் சந்தையாக சுறுசுறுப்புடன் இயங்கியது.

சந்தை செயற்படாமையால் இவ்வூரில் உற்பத்தியாளர் கொடிகாமம்சென்று தமது பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். வடமராட்சி வியாபாரிகள் இச்சந்தை இயங்காமல் இருப்பதனால் பொருட்கள் பெறுவதற்கு கொடிகாமம் செல்கின்றனர்.

வியாபாரிகள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வோர் பலமைல் தூரம் சென்று தமது தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர். இந்தப் பிரதேசத்திற்கு என்று சந்தை ஒன்று இருக்கும் போது அச்சந்தையை பாராமுகமாக விட்டு விட்டு வருவதால் சந்தை மூடுவிழாவிற்கு செல்லும் நிலையே காணப்படுகின்றது.

இந்தப் பொதுச் சந்தையை இயக்கி மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்து எதிர் காலத்தில் புதுப்பொலிவு அடைந்து சகலரும் பயன் அடைய நடவடிக்கைகை எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோருகின்றனர். (150)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் முற்பகல் 10 மணிக்கு விசேட சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது.

இவ் உற்சவத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'உதித்தனன் உலகம் உய்ய' என்னும் விடயம் பற்றி பேராசிரியர் எம்.வேதநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (01)

## வரணி தபாலகத்தில் உதவிப் பணக்கொடுப்பனவு

(வடவரணி)

வரணிப் பிரதேசத்தில் நலிவுற்ற மற்றும் விதவைகள், வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கான உதவிப்பணம் வரணி தபாலகத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டுவருகிறது இதே வேளை முதியவர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது. .மேலும் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் ஊனமுற்ற வலுவிழந்தோர்க்கான மூவாயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் 19ஆம் திகதி வரை வழங்கப்படும் என சமூகசேவைகள் திணைக்களம் கடந்த மாதம் பயனாளிகளுக்கு தெரியப்படுத்தி இருந்தமை குறிப்பித்தக்கது. (150)

## முரசின் இன்றைய பலன்



(11.08.2013 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 26 ஆம் திகதி.
அத்தநட்சத்திரம் பி.இ 02.02 வரை
பஞ்சமி திதி,அமிர்தசித்தம். இராகுகாலம 04.34- 06.04 வரை.
சுபநேரம 09.04-10.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வன்மத்தைக் கைவிட்டால் விமோசனம், எண்ணெய் பழவகை உணவுகளால் தேகசுகம் பாதிப்பு,ஆவணம் இன் மையால் தண்டம். |
| ரிஷபம் | நம்பிக்கையால் காரிய ஜெயம், தடைசெய்யப்பட்ட பொருட்களில் எச்சரிக்கை,மின்தடையால் கற்றலுக்கு பாதிப்பு, சுவீப் அதிர்ஷ்டம். |
| மிதுனம் | உலக வங்கி வீட்டுத்திட்டத்திற்கு தெரிவாதல்,வெளியீட்டில் ஆர்வம் காட்டல். |
| கடகம் | தேர்தலில் நிற்கும் எண்ணத்தை பரிசீலனை, கடனால் திண்டாட்டம், பயணமுயற்சி இடைநாடொன்றில் சேர்த்து விடல்,மயிரிழையில் விபத்தினின்றும் விலகல். |
| சிம்மம் | அவமானத்தைச் சகித்ததனால் நினைத்தது நிறைவேறல், தனிவழி சென்று துன்பமுறல்,சுவீப்பில் பணம். |
| கன்னி | இந்தியன் நிதியுதவியுடன் மனையமைக்கும் நற்செய்தி,நடுநிசியில் அம்புலன்சை அழைக்கும் அவலம், கள்வர் பற்றிய விழிப்புணர்வு,அமைதிக்குப் பங்கமேற்படல். |
| துலாம் | மதுப்பிரியர்களின் அட்டகாசத்தால் அச்சம், வாகனங்களின் ஆக்கிரமிப்பினால் வியாபாரம் பாதிப்பு, பணிந்து போனதால் நன்மை. |
| விருச்சிகம் | கிருமி நாசினி பற்றிய விழிப்புணர்வு, பங்குத்தொழிலில் சேரும் ஆர்வம். |
| தனுசு | பரீட்சை புலமைப்பரிசிலுக்கு சாதகமாக அமைதல், இடமாற்றம் ஏற்படலாம் என்ற அச்ச உணர்வு,இளைப்பாற ஆவணங்கள் சேர்த்தல். |
| மகரம் | வங்கிக்கடனுக்கு பச்சைக்கொடி, மாமன்மாரினால் ஆதரவும் உதவியும், பூப்படைதல், குழந்தைப் பேறு,பயணம் பற்றிய இனிப்பான செய்தி. |
| கும்பம் | அச்சத்தை ஒழித்தமையினால் காரிய சித்தி,பஜனைகளில் கலந்து கொள்ள முடிவெடுத்தல், இயந்திரக்கோளாறு பயணத்தைத் தடைப்படுத்தல், குழந்தைப்பேறு. |
| மீனம் | உறுதியுடன் செயற்பட்டதால் வெற்றி, காசோலையை ஏற்க மறுத்ததால் மோசயினின்றும தப்புதல். குறைகேள் சேவையில் முறைப்பாடு. |

# 14ஆவது உலக தடகளம் மொஸ்கோவில் நேற்று ஆரம்பம்

## இன்று அசத்துவாரா? உசைன் போல்ட்



(மொஸ்கோ)

14ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நேற்று ஆரம்பமாகியது.

200 நாடுகளைச் சேர்ந்த 2000 தடகள வீர,வீராங்கனைகள் பங்கேற்கும் இப்போட்டி மொஸ்கோவில் உள்ள லுஷினிகி மைதானத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

9 நாள்கள் நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் பிரிவில் 24 வகையான போட்டிகளும், மகளிர் பிரிவில் 23 வகையான போட்டிகளும் இடம்பெறவுள்ளன. இன்று நடைபெறவுள்ள 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் உலகின் வேகமான மனிதன் உசைன் போல் சாதனையுடன் தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் போட்டிக்கான மொத்தப்பரிசுத்தொகை 43 கோடியே 65 இலட்சம் ஆகும். தனி நபர் பிரிவில் தங்கம் வெல்பவருக்கு 36 இலட்சத்து 46 ஆயிரமும், வெள்ளிப் பதக்கம் வெல்பவருக்கு 18 இலட்சத்து 20 ஆயிரமும், வெண்கலம் வெல்பவருக்கு 12 இலட்சத்து 13 ஆயிரமும் பரிசாக கிடைக்கும்.

தொடர் ஓட்டங்களில் தங்கம் வெல்லும் அணிக்கு 48 இலட்சத்து 54 ஆயிரமும், வெள்ளிப் பதக்கம் வெல்லும் அணிக்கு 24 இலட்சத்து 27 ஆயிரமும், வெண்கலம் வெல்லும்அணிக்கு 12இலட்சத்து 13 ஆயிரமும் ரொக்கப் பரிசாக கிடைக்கும். இதுதவிர உலக சாதனை படைப்பவர்களுக்கு 61 இலட்சம் ரொக்கப் பரிசு கிடைக்கும். இதற்கான பரிசுத் தொகையை டொயோட்டா உள்ளிட்ட நிறுவனங்கள் வழங்குகின்றன.

## தண்டனைக் காலம் அதிகரிப்பு

சர்வதேச தடகள சம்மேளனத்தின் புதிய விதிமுறைப்படி தடகள வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்படவுள்ளது.

இது 2015 ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என சர்வதேச தடகள சம்மேளனம் தெரிவித்துள்ளது. உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நேற்று ஆரம்பமானது. இந்த நிலையில் அங்கு நடைபெற்ற சர்வதேச தடகள சம்மேளனத்தின் கூட்டத்தின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உலகின் முன்னணி தடகள வீரர்களான அமெரிக்காவின் டைசன் கேய், ஜமேக்காவின் ஆசாபா பவல், ரஷ்யாவின் வெரோனிகா கேம்ப்பெல் உள்ளிட்டோர் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கினர்.

தற்போதைய விதிமுறைகளின்படி முதல் முறையாக ஊக்கமருந்து பயன்படுத்தியதுகண்டுபிடிக்கப்பட்டால், தடகளப் போட்டிகளில் பங்கேற்க இரண்டு ஆண்டுகள் மட்டுமே தடைவிதிக்கப்படுகிறது. இதனால் சம்பந்தப்பட்ட வீரர் ஒலிம்பிக் உள்ளிட்ட பெரிய போட்டிகளில் பங்கேற்பதில் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. அதனால் இதுபோன்ற செயல்களில் வீரர்கள் துணிந்து ஈடுபடுகிறார்கள். அதன் காரணமாகவே இப்போது தண்டனையை அதிகரித்துள்ளதாக சர்வதேச தடகள சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## முன்பள்ளி விளையாட்டு விழா

திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலைய கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. செங்குந்தா இந்துக் கல்லூரி உப அதிபர் சின்னத்தம்பி பத்மராஜா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் சிவராசா, சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் மாலாதேவி விவேகானந்தன், கௌரவ விருந்தினர்களாக ஜே 112 திருநெல்வேலி கிராம அலுவலர் செல்வி இராஜேஸ்வரன் பவித்திரா, திருநெல்வேலி குடும்ப நல உத்தியோகத்தர் செல்வி நிஷாந்தினி துரைசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



## ஆரம்பமே அமர்க்களம்

(பேர்லின்)

ரெக்டன் அணிக்கு எதிரான ஜேர்மனி கோப்பை கால்பந்து தொடரின் முதல் சுற்று லீக் போட்டியில் பேயர்ன் முனிக் அசத்தலான வெற்றி பெற்றது.

ஜேர்மனியில் 71ஆவது ஜேர்மனி கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது.இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்று லீக் போட்டியில் நடப்பு சம்பியன் பேயர்ன் முனிக் அணி, ரெக்டன் அணியை எதிர்கொண்டது. இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய முனிச் அணிக்கு சாகியூரி (18ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். தொடர்ந்து தோமஸ் முல்லர் (45ஆவது நிமிடம்) மற்றொரு கோல் அடிக்க, முதல் பாதியின் முடிவில், முனிக் அணி 2-0 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய முனிக் அணிக்கு தோமஸ் முல்லர் (59, 64ஆவது நிமிடங்கள்), ரொபின் (88 ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்து வெற்றியை உறுதி செய்தனர். பேயர்ன் முனிக் அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


## அம்மாவின் குமுறல்



(லண்டன்)

குடிபோதையில் பாதுகாவலர்கள் மீது சிறுநீர் கழித்தது பெரிய விடயமே அல்ல, ஊடகங்கள் தான் பெரிதுபடுத்துகிறது என மொன்டி பனிசர் அம்மா தெரிவித்தார். இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் மொன்டி பனிசர், போதையில் கிளப் பாதுகாவலர்கள் மீது, சிறுநீர் கழித்து சிக்கலில் சிக்கினார். இதனால், இவரது கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இதுகுறித்து பனிசரின் அம்மா குர்ஷரன் கவுர் கூறுகையில்,பனிசர் செய்தது ஒரு விடயமே அல்ல. இதை ஊடகங்கள் தான் பெரிதுபடுத்துகின்றன. பெற்றோர் என்ற முறையில் இதற்காக வருத்தப்படுகிறோம், அவ்வளவுதான். மற்றபடி, இது முடிந்து போன பிரச்சினை. இதுகுறித்து வேறெதுவும் சொல்ல விரும்பவில்லை என்றார்.

## முர்ரே அதிர்ச்சித் தோல்வி



(மான்ட்ரியல்)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடரில் மூன்றாவது சுற்றில் பிரிட்டன் வீரர் முர்ரே அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

கனடாவில் உள்ள மான்ட்ரியல் நகரில் ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் பிரிட்டனின் ஆண்டி முர்ரே, தரவரிசையில் 38ஆவது இடத்தில் உள்ள லொட்விய வீரரான எர்னட்ஸ் கல்பிஸ்சை சந்தித்தார். இதன் முதல் செட்டை 4-6 என இழந்த முர்ரே, தொடர்ந்து இரண்டாவது செட்டையும் 3-6 என பறிகொடுத்தார்.


முடிவில், பிரிட்டனின் ஆண்டி முர்ரே, 4-6, 3-6 என்ற நேர்செட்களில் தோல்வியடைந்து வெளியேறினார்.

மற்றொரு மூன்றாவது சுற்றுப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச், உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்டோமினை 2-6, 6-4, 6-4 என்ற செட்களில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு மூன்றாவது சுற்றுப் போட்டியில் ஸ்பெயினின் ரபெல் நடால், போலாந்தின் ஜெர்ரி ஜான்கோவிச்சை 7-6, 6-4 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார்.

## தேசிய மட்ட கடற்கரை கரப்பந்து முல்லையில் நேற்று ஆரம்பம்





தேசிய மட்ட கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி நேற்று முல்லைத்தீவு கடற்கரையில் ஆரம்பமானது. இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன. இதில் வடமாகாண அணி முதல் போட்டியில் மேல் மாகாண அணியுடன் மோதியது. இதில் வடமாகாண அணி 2–0 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றது. இப்போட்டி நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வேதநாயகன் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர். 39ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக இப்போட்டி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# மட்டுவில் வளர்மதி ஆண்டு நிறைவு கால்பந்து கிண்ணம் வென்றது சென். அன்ரனீஸ்

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டு ஆண்டு நிறைவு கால்பந்துப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை பாசையூர் சென். அன்ரனீஸ் அணி கைப்பற்றிக் கொண்டது. மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டி நேற்று முன்தினம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இறுதிப் போட்டியில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும், அரியாலை ஐக்கியம் அணியும் மோதின. முற்பாதி ஆட்டம் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. முற்பாதி ஆட்டத்தின் சென். அன்ரனீஸ் வீரர் கலிஸ்ரன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இதன் பின்னர் வேகமுற்ற அரியாலை ஐக்கிய வீரர்கள் பதில் கோல் அடித்து போட்டியைச் சமன் செய்தனர். இதில் அரியாலை ஐக்கிய வீரர்களான தர்சன், நிரோஜன் அடுத்தடுத்து இரு கோலைப் போட்டு போட்டியைச் சமன் செய்தனர். இந்நிலையில் முற்பாதி ஆட்டம் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவுற்றது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் வேகமாகச் செயற்பட்டன. இதில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியின் வீரர்களின் சிறப்பான செயற்பாட்டால் சிறப்பானதொரு கோல் ஒன்றைப் பெற்றுக்கொண்டதுடன் அணியையும் முன்னிலைப்படுத்தியது. தொடர்ந்து அரியாலை ஐக்கியம் அணியும் பதில் கோல் போடும் முனைப்புடன் தீவிரமாக ஆடியது. சென். அன்ரனீஸ் அணியின் பிற்கள வீரர்களின் தடுப்பணையைத் தாண்டி முடியாத நிலை காணப்பட்டது. இறுதியில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், இளவாலை யங் ஹென்றிஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை யங்ஹென்றிஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.இப்போட்டியின் ஆட்டநாயகனாகசென். அன்ரனீஸ் வீரர் கலிஸ்ரன், சிறந்த கோல் காப்பாளராகஅரியாலை ஐக்கிய அணியைச் சேர்ந்த றஜீந்தன், மூத்த வீரருக்கான விருதை றோயல் அணியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் (வெள்ளை) ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (118)

# காரைநகரில் இன்று பாரம்பரிய விளையாட்டு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச இளைஞர்களுக்கான பாரம்பரிய விளையாட்டு விழா இன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு காரைநகர் யாழ்ரன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தியாகி சோபா அறிவாலயமும், காரைநகர் பிரதேச விளையாட்டு கழகங்களும் இணைந்து நடாத்தும் இப் பாரம்பரிய விளையாட்டு விழாவில், கிறீஸ் மரம் ஏறுதல், தேங்காய் துருவுதல், தென்னம் ஓலை பின்னுதல் மற்றும் பல போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ள வுள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் பிரதேச இளைஞர்கள் போட்டிகளில் பங்கு கொண்டு தமது திறன்களை வெளிப்படுத்துமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(50)

# மைக்கல் அணி வசம் கிண்ணம்




(வடமராட்சி)

வடமராட்சி நண்பர்களின் போர் என அழைக்கப்படும் உதயசூரியன் மாலுசந்தி மைக்கல் அணிகளுக்கிடையிலான நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் மைக்கல் அணி கிண்ணத்தைக் கைப் பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 4ஆம் திகதி உயதசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் மைக்கல் அணியும், உதயசூரியன் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மைக்கல் அணி நிர்ணயிக்கப்பட்ட பத்து ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விபூலியன் 36, அச்சுதன் 16, ரகுபரன் 12 ஓட்டங்களைப் பெற்றனர. பந்து வீச்சில் சுகந்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 102 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உதயசூரியன் அணி இறுதி வரை போராடியபோதும் வெற்றியைப் பதிவாக்கிக்கொள்ள முடியவில்லை. இறுதியில் 10 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 97 . ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத்தழுவியது. இதில் டிலக்ஷன் 44, அஜந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கபிலன் மூன்று, தினோஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மைக்கல் அணியின் கபிலன், சிறந்த துடுப்பாட்ட வீரராக உதயசூரியன் அணியின் டிலக்ஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# திருவள்ளுவர் முன்பள்ளி விளையாட்டு விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருவள்ளுவர் சனசமூக நிலையத் தலைவர் அம்பலவாணர் நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் வயலக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜா, கௌரவ விருந்தினர்களாக ஜேர்மன் வாழ் சற்குணராஜா பகீரதன், ஜேர்மன் வாழ் திருமதி கனகரட்ணம் பஞ்சரத்தினம், சுவிஸ் வாழ் கனகரட்ணம் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு போட்டிகள் இடம்பெறும் என்றும், இதில் சிறார்களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் பல இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் அணியைக் காணலாம். இப்போட்டியில் எழுவைதீவு பத்திமா அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உட்பட பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (65)

# டையமன்ஸ் நூற்றாண்டு விழா கால்பந்து அரையிறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ்

(நெல்லியடி)

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் கால்பந்துத் தொடரின் அரையிறுதிக்கு நாவாந்துறை சென். மேரிஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு வடக்கு மாகாண கால்பந்து அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்தாட்டத்தைத் தொடரை நடாத்தி வருகின்றது. அணிக்கு ஏழு பேர் கொண்ட இக்கால்பந்துத்தொடர் டையமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே பலம் பொருந்திய அணிகள் என்பதால் இப்போட்டி குறித்த எதிர்பார்ப்பு இரசிகர்களிடையே அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் ஆட்டம் தொடங்கி 28ஆவது நிமிடத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வீரர் அன்ரனி ஜெனட் முதல் கோலை பெற்றுக்கொண்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து உடுப்பிட்டி நவஜீவன் அணி தமது ஆட்ட வியூகத்தை மாற்றி போராடியபோதும் பதில் கோல் போட முடியவில்லை. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது. தொடர்ந்து பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி இரண்டாவது நிமிடத்தில் சென். மேரிஸ் வீரர் அன்ரனி ஜெனட் மற்றுமொரு கோலைப் போட்டு அணியின் நிலையை ஸ்திரப்படுத்தினார். உடுப்பிட்டி நவஜீவன் அணி கோலைப் பெற்றுக்கொள்ள கடுமையாகப் போராடியபோதும், பிற்கள வீரர்கள் மற்றும்கோல் காப்பாளரின் சிறப்பான செயற்பாட்டினால் அது முடியவிலை.

இருப்பினும் 54ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்ட உதையை உரிய முறையில் பயன்படுத்திய நவஜீவன் அணி அதனைக் கோலாக்கியது. தொடர்ந்து இரு அணிகளும் தமது நிலைகளைப் பலப்படுத்தப் போராடியபோது ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதன் அடிப்படையில் இரண்டு வெற்றி பெற்றுக்கொண்ட நாவாந்துறை சென். மேரிஸ் அணி புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. அத்துடன் இப்போட்டியுடன் லீக் ஆட்டங்களும் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் 17ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் கிளி. நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதவுள்ள அதேவேளை, 18ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மன்னார் சென். லூசியஸ் அணியும், இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மோதவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (17)

# பால் சாப்பிடாவிட்டால் சிறுநீரகக் கற்கள் ஏற்படும்!



"சிறுநீரகத்தில் கல்லா? பால் சாப்பிடாதீர்கள். பாலில் கல்சியம் அதிகம் இருக்கிறது. அது சிறுநீரகத்தில் கல்லை ஏற்படுத்திவிடும்" என்பார்கள். ஆனால் இதற்கு நேர்மாறாக, "பால், தயிர், மோர் போன்றவற்றை நீங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளா விட்டால், சிறுநீரகத்தில் கற்கள் தோன்றிவிடும்" என்கிறார் சிறுநீரகவியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம்.ஆர்.பாரி.

"பால், தயிர் போன்றவற் றைச் சேர்த்துக் கொள்ளாவிட் டால் உடலில் கல்சியம் பற்றாக்குறை ஏற்படும். கல்சி யத்தின் தேவை காரணமாக, குடல் அதிக அளவில் ஒக்ஸ லேற்றை ஈர்த்துக் கொள்ளும். இவ்வாறு ஈர்க்கப்பட்ட ஒக்ஸ லேற் இரத்தத்தில் கலந்து சிறுநீரகத்தில் கற்களை ஏற் படுத்திவிடும்" என்கிறார் அவர்.

நமது நாட்டில் சிறுநீரகக் கல் தோன்றும் பிரச்சினை அதிகமிருக்கிறது. இதற்குக் காரணம் நமது வெப்பநிலை தான். அதிக அளவு வெப்பத் தால் உடலில் அதிகம் வியர்க் கிறது. வெளியேறும் வியர்வைக்கு ஏற்ற அளவில் தண்ணீர் குடிக்காவிட்டால், சிறுநீரகக் கற்கள் உருவாகிவிடுகின்றன.

நமது உணவுமுறை யும் கூட இப்போது மாறிவிட்டது. பீட்ஸா, பர்கர் என்று சாப்பிட ஆரம்பித்துவிட்டோம். விலங்குகளின் புரதச் சத்து அதிக அளவில் நமது உடலில் சேர்கிறது. பழங்கள், காய்கறிகளைத் தேவையான அளவு சாப்பிடுவது இல்லை. இவையும் சிறுநீரகக் கற்கள் உருவாகக் காரணம்.

உடல் உழைப்புக் குறைந்துவிட்டது. நடப்பதும் குறைந்துவிட்டது. இரு சக்கர வாகனங்களில் சென்று அலுவலகத்தில் ஏஸி அறை யில் வேலை செய்வது என்று வாழ்க்கைமுறை மாறிவிட்டது. சிறுநீரகக் கற்கள் உருவாக இவையும் காரணம்.

முன்பை விட அதிக அளவில் இப்போது பெண் களுக்கும் சிறுநீரகக் கல் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்குக் காரணம் பெண்களின் வாழ்க்கை முறை மாறிவிட் டதே. இப்போது படிப்பு, வேலை என்று ஆண்களைப் போலவே அவர்களும் வெளியே செல்வதால், தேவை யான அளவு தண்ணீர் குடிப்ப தில்லை. உடலுக்குத் தேவை யான சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவதில்லை.

அதிக அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்று சொன்னவுடன், சிலர் ஒரே நேரத்தில் 1 லீற்றர் தண்ணீ ரைக் குடிப்பார்கள். அப்படி குடிக்கக் கூடாது. சாப்பாட் டுக்குச் சிறிது நேரம் முன்பும், சாப்பிட்ட பின்பும் இரண்டு, இரண்டு டம்ளர் தண்ணீர் அருந்தலாம். தாகம் எடுக்கும்போதும் இடையி டையே தண்ணீர் அருந்தலாம். சிலர் காலையில் எழுந்து வெறும் வயிற்றில் 1 லீற்றர், 2 லீற்றர் என்று தண்ணீரைக் குடிப்பார்கள். அப்படிக் குடித்துவிட்டு, அன்றைய நாள் முழுவதும் தேவை யான அளவு தண்ணீர் குடிக்காவிட்டாலும் சிறுநீரகக் கற்கள் தோன்றும்.

எப்போதெல்லாம் சிறுநீர் மஞ்சள் நிறமாகவோ அல்லது வேறு நிறமாகவோ போகிறதோ, எப்போதெல்லாம் சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் ஏற் படுகிறதோ, அப்போதெல்லாம் நாம் நமது உடலுக்குத் தேவையான தண்ணீரைக் குடிக்கவில்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

சிறுநீரகத்திலோ, சிறுநீர் பாதையிலோ கற்கள் தோன்றிவிட் டால், அவற்றை அகற்ற நவீன மருத்துவமுறைகள் இப்போது வந்துவிட்டன. சிறுநீர்ப் பாதை யில் ஒரு கருவியை நுழைத்து கற்களை நீக்கும் முறையும் உள்ளது. சிறுநீரகத்தில் துவாரம் போட்டு கற்களை நீக்கும் முறையும் உள்ளது.

சிறுநீரகக் கற்களை நீக்க வாழைத்தண்டுச் சாறை சிலர் அருந்துவார்கள். சிறுநீரகக் கற்கள் இதனால் உடலை விட்டு வெளியேறுமா? என்று உறுதியாகச் சொல்ல முடியாது. அதே சமயம் வாழைத்தண்டுச் சாறு அருந்துவதால் உடலுக்கு எந்தக் கெடுதியும் இல்லை. வாழைத் தண்டுச் சாறு ஒரு சிறுநீர் பெருக்கியாக உடலில் செயல்படுவதால், அதிக அளவு சிறுநீர் வெளியேறும்.



அரிஸ்டோட்டிலிடம் அலெக்ஸாண்டர் மாணவராக இருந்த நேரம். அரிஸ்டோட்டில் தமது மாணவர்களிடம் ஒரு கேள்வி எழுப்பினார்.

"நீங்கள் மன்னராக இருந்தால், உங்கள் நாட்டில் குழப்பம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?"

ஒரு மாணவன் சொன்னான், "ஐயனே, அமைச்சரவையைக் கூட்டி அவர்கள் ஆலோசனைப்படி நடப்பேன்..."

மற்றொரு மாணவன் சொன்னான், "என் முன்னோர்களின் வழிமுறை களைக் கேட்டறிந்து அதன்படி நடப்பேன்."

அடுத்ததாக அலெக்ஸாண்டர் கூறினார்: "சூழ்நிலைக்கு ஏற்றபடி முடிவெடுப்பேன்..."

அதைக் கேட்ட அரிஸ்டோட்டில், "நீயே உலகத்தை வெல்வாய்!" எனப் புகழ்ந்தார்.

அலெக்ஸாண்டரின் இந்த சுயசிந்தனைதான் அவருக்கு வெற்றிகளைத் தேடித் தந்தது.

## சுயசிந்தனை

# பிழையின்றித் தமிழ் 38

- ஞானச்செல்வன் -

**மீண்டும் ஒருமை பன்மை மயக்கம்**

"வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளன" என்று செய்தியாளர், தொலைக்காட்சியொன்றில் படித்தார். எண்ணிக்கை, நடைபெறவுள்ளது என்று ஒருமை முடிவுதான் சரியா-னது. பல தொகுதிகள் என்பதால் உள்ளன என்று பன்மையில் முடித்தாரா? அப்படிக் கருதினால் தவறு.



மற்றொரு செய்தி அறிக்கையில், "அவற்றுக்கு இறுதி முடிவு ஏற்படமாட்டா" என்று செய்தியாளர் படித்தார். முடிவு என்னும் சொல்லுக்கு ஏற்ப, மாட்டாது என்றே முடித்திட வேண்டும். அவற்றுக்கு எனும் பன்மை கருதி மாட்டா என்று பன்மை முடிவு கொடுத்தார் என்று கருதுகிறோம் இதுவும் பிழையே.

வினை முற்று (முடிக்கும் சொல்) பொருளுக்கு ஏற்ப அமைத்தல் வேண்டும்.

"திருத்தேர் இன்று நிலைக்கு வாராது (வராது)" - இஃது ஒருமை.

"பூனைகள் இங்கு வாரா (வர மாட்டா)" - பன்மை

"ஒவ்வொரு கருத்தும் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடியதாகும்" (ஒருமை)

"கருத்துகள் எல்லாம் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடியன" (பன்மை)

"வழுக்கு மரம் முதலிய வீர விளையாட்டுகள் பயிற்சி முகாமில் நடைபெற்றது"

இங்கு விளையாட்டுகள் நடைபெற்றன என்று பன்மையில் முடித்தல் வேண்டும்.

"நாட்டின் பல பாகங்களில் வெப்பநிலை கூடியே காணப்பட்டன"

வெப்பநிலை கூடியே காணப்பட்டது என்பதே சரி. பல பாகங்களில் என்பதை மனதில் நினைத்து இப்படி முடித்தார் போலும்.

இந்தக் குழப்பம் எல்லாம் சற்றே நினைத்துப் பார்க்க அகன்று போகும். சரியாக இருக்க வேண்டும் என்னும் அக்கறையை மனத்தில் கொள்ள வேண்டும். இது நம் பரிந்துரை. "ஆமாம் ஐயா, எல்லாம் என்று தொடங்கி போகும் என முடித்துள்ளீர்கள். சரியா?" சரியே. அது போகும் - அவை போகும் - ஒரே சொல்தான்.

**சொற்றொடர் (வாக்கிய) வகைகள்**

வாக்கிய அமைப்பில் கருத்தைப் பொறுத்து ஒரு-வகையாகவும், அமைப்பைப் பொறுத்து ஒரு-வகையாகவும் இரண்டு கூறுகளைக் காண்போம். முதலில் கருத்து வாக்கியம் என்பதுள் அடங்கும் பிரிவுகள் பற்றி அறிவோம்.

1. ஒரு செய்தியை உணர்த்துவது செய்தி வாக்கியம்.

(எ-டு) உழைத்தால் வாழ்வில் உயரலாம்.

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டால் ஆட்சி நிலைக்காது. ஈண்டு செய்தி - நியூஸ் - அன்று; ஒரு கருத்து எனக் கொள்க.

2. எதுபற்றியேனும் யாரிட மேனும் வினவுகின்ற வகையில் அமைவது வின[illegible] வாக்கியம்.

(எ-டு) மாநாட்டுக்கு நீ போய் வந்தாயா?

நாளை கல்லூரிக்கு அவர் வருவாரா?

3. நமது விருப்பத்தை - விழைவை - வெளிப்படுத்தும் தன்மை கொண்டது விழைவு வாக்கியம்.

(எ-டு) வாழிய செந்தமிழ்- (வாழ்த்து)

நாளை எமதில்லம் வருக - (வேண்டுகோள்)

உனது சான்றிதழ்களைக் கொண்டு வா - (கட்டளை)

கயவன் அழிக - (ஆற்றாமை - சபித்தல்)

4. நமது உணர்ச்சியைப் புலப்படுத்தும் வண்ணம் அமைவது உணர்ச்சி வாக்கியம்.

(எ-டு) நீயே போன பின் நான் மட்டும் இருந்தென்ன!

முத்தமிழ்த்துறையில் முறைபோகிய வித்தக வருக!

! இப்படி ஒரு குறியிட்டால், இதனை ஆச்சரியக்குறி என்பார்கள். ஆச்சரியம் (வியப்பு). வியப்பு மட்டுமன்று; எத்தகைய உணர்ச்சியை வெளிப்படுத்தினாலும் ! இக்குறி இடப்படுதலின் இதை உணர்ச்சிக்குறி எனல் தக்கது.

# எம்.கே.டி. எனும் பண்ணிசைப் பாவலன்

07

- வே. முத்துக்குமார் -



சிறைவாசம் முடிந்து சில நாட்கள் கழித்து நிறைய கச்சேரிகள் செய்ய விரும்பிய எம்.கே.டி.க்கு தமிழிசை சங்கம் தவிர்த்து மற்ற எந்த சபாக்களிடமிருந்தும் அழைப்பு வரவில்லை. எம்.கே.டி. உச்சத்தில் இருந்த காலத்தில், கற்பனை செய்து பார்க்க முடியாத அவருடைய வளர்ச்சியையும், புகழையும் கண்டு நிறைய சபாக் குழுவினர் அவர் மீது மிகுந்த காழ்ப்புணர்ச்சியைக் கொண்டிருந்தனர். தன்னுடைய திரைப்படங்களில் கர்நாடக இசை ராகத்தில் அமைந்த நிறைய பாடல்களை அவர் தொடர்ந்து பயன்படுத்தி வந்தார். கர்நாடக இசைக்கென உள்ள பாரம்பரியத்தைக் கட்டுடைக்கும் செயல் இது என அப்போதைய சில கர்நாடக இசை வித்வான்கள் விமர்சித்து வந்தனர். பல வருடங்களுக்கும் மேலாக, கர்நாடக இசைக் கச்சேரிகளின் இடையே தமிழிசைப் பாடல்கள் பாடப்பட்டு வந்த போதிலும் கூட, தெலுங்கு கீர்த்தனைகள், சமஸ்கிருத கீர்த்தனைகள் ஆகியவற்றிற்கு ஈடான உரிய அந்தஸ்தை தமிழிசைப் பாடல்கள் பெறவில்லை. தனது கச்சேரிகளின்போது பலர் கேட்டிராத, ரசித்திராத பல தமிழிசைப் பாடல்களைத் தொடர்ந்து பாடி வந்தார் எம்.கே.டி. அவருடைய தமிழிசைப் பாடல்கள் அனைத்தையும் தெய்வீகத்தன்மையோடும், கர்நாடக இசை ராகங்களின் அடிப்படையிலும் எழுதித் தந்தவர் பாபநாசம் சிவன்.

கால மாற்றத்தில் சில திரைப்படங்களைச் சொந்தமாக தயாரித்து நடிப்பது என்கிற முடிவுக்கு வந்தார் எம்.கே.டி. ராஜமுக்தி, புதுவாழ்வு ஆகிய திரைப்படங்களைத் தயாரித்து நடித்தார். ராஜமுக்தி படத்திற்கு வசனமெழுதியவர் இலக்கிய கர்த்தா புதுமைப்பித்தன் (தனது மகள் தினகரிக்குத் தான் விட்டுச் செல்கின்ற ஒரே சொத்து ராஜமுக்தி படத்தின் வசனம் மட்டும்தான் என்று தொ.மு.சி.ரகுநர்தனுக்கு எழுதிய கடிதமொன்றில் புதுமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளார்). புதுமைப்பித்தன் மறைவிற்குப் பிறகு அப்படத்தின் எஞ்சிய பகுதிகளுக்கு வசன மெழுதியவர் டி.என்.ராஜப்பா. இயக்குநர் ராஜா சந்திரசேகர் இயக்கிய இப்படத்தில் பாகவதருடன் இணைந்து பின்னணி பாடியவர் எம்.எல். வசந்தகுமாரி. செருகளத்தூர் சாமா, எம்.ஜி.ஆர். வி.என்.ஜானகி, பி.எஸ். வீரப்பா, எம்.ஜி.சக்கரபாணி ஆகியோர் பங்களித்திருந்த இப்படத்தின் ஹீரோயினாக நடித்தவர் பானுமதி. எம்.கே.டி.யின் பெரும்பாலான படங்களில் நடித்து வந்த அவரது நெருங்கிய நண்பரான என்.எஸ்.கே. இப்படத்தில் நடிக்கவில்லை.

சந்திரலேகா படத்திற்காக ஏற்கனவே கால்ஷீட் ஒதுக்கியிருந்ததால் அவரால் இப்படத்தில் நடிக்க முடியவில்லை. இப்படத்தின் ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கும்போதே எம்.கே.டி.க்கு வேண்டாத சிலர் ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டார்கள். அதாவது முப்பது மாத சிறைவாசத்துக்குப் பிறகு எம்.கே.டி.யின் குரல் மாறிவிட்டது என்றும் அவருடைய குரலில் பழைய இனிமை இல்லை என்றும் கூறப்பட்டது. இப்படத்தின் பாடல்களை வெளியிடும் உரிமையைப் பெற்றிருந்த ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அந்த வதந்தியை அப்படியே அப்படத்தின் விளம்பர யுக்தியாகப் பயன்படுத்திக் கொண்டார். அந்நாள் வரையில் ஒரு படத்தினுடைய பாடல்கள் அனைத்தும் அப்படம் திரைக்கு வந்த பிறகே வெளியாகும். ஆனால் ராஜமுக்தி பட்த்தின் பாடல்களின் இசைத் தட்டுகளை அப்படம் வெளியாவதற்கு ஒரு மாதம் முன்னதாகவே வெளியிட்டு விட்டார் ஏ.வி. மெய்யப்ப செட்டியார். அப்படத்தின் பாடல்கள் ஹிட்டான அளவிற்கு அப்படம் வெற்றி பெறவில்லை. ராஜமுக்தி, புதுவாழ்வு படங்களைத் தொடர்ந்து அமரகவி, சியாமளா மற்றும் சிவகாமி ஆகிய திரைப்படங்களில் நடித்தார். அவருடைய முந்தைய படங்களோடு ஒப்பிடுகிற வரையில் இந்தப் படங்கள் அனைத்தும் தோல்வியையே சந்தித்தன. அத்தருணத்தில் புதியதொரு ட்ரெண்ட் செட்டிற்குத் தமிழ் திரைப்படங்கள் நகர்ந்திருக்க, எம்.கே.டி.யால் அந்த ட்ரெண்ட் செட்டிற்குள் தன்னை முழுமையாகப் பொருத்திக் கொள்ள முடியவில்லை. அதை அவர் விரும்பவும் இல்லை.

லட்சுமிகாந்தன் கொலை வழக்கிலும், தொடர்ச்சியான தனது திரைப்படங்களின் பெருத்த தோல்வியாலும் அதிக பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான எம்.கே.டி.க்கு அச்சமயத்தில் சொர்க்கவாசல் என்கிற திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்தது. அப்படத்தின் தயாரிப்பாளர் எம்.கே.டி.யிடம் ஒரு இலட்ச ரூபாயைக் கொடுக்க, படத்தினுடைய கதையம்சம் புதிய ட்ரெண்டிற்கு ஏற்றவாறு இருப்பதாகச் சொல்லி அப்படத்தில் நடிக்க மறுத்துவிட்டார். எம்.கே.டி.யின் துரதிர்ஷ்டவசமான நிலையைப் பார்த்துவிட்டு பிரபலமான அரசியல்வாதிகளான ராஜாஜி, காமராஜர், அண்ணா, சின்ன அண்ணாமலை மற்றும் சிலர் அவருக்கு ஆதரவுக்கரம் நீட்ட, அதை தனக்கே உரிய மென்மைத் தனத்தோடு மறுத்து விட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக, எம்.கே.டி.யைக் காங்கிரஸ் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட காமராஜர் அழைப்பு விடுத்தபோது, அதை முற்றிலுமாக நிராகரித்து விட்டார்.

(தொடரும்)

# எதற்காக ஓடுகிறோம்?



வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டால் போதும். மனிதர்களுக்கு ஒரே ஓட்டம்தான். பஸ்ஸைப் பிடிக்க வேண்டும். ரயிலைப் பிடிக்க வேண்டும். அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும். பல வேலைகள், பல பிரச்சினைகள் என நாம் ஓடிக்கொண்டே இருக்கிறோம். எல்லோரும் எங்கே ஓடுகிறோம்? பணம் சம்பாதிக்கவா? பணம் வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானது தான். ஆனால், பணம் மட்டுமே வாழ்க்கையாகி விடுமா? இலட்சியத்தை அடையவா? இலட்சியம் என்பது கடைசி நிலைதானே. அதனை அடைய நாம் செல்லும் பயணம் சுகமானதாக இருக்க வேண்டாமா?

வாழ்வின் முடிவை நோக்கி ஓடுகிறோமா, வாழ்க்கையை நாம் அனுபவிக்க வேண்டாமா?

ஒரு கதை சொல்கிறேன். ஒருவர் தன் வீட்டுக்கு வந்தார். அப்போதுதான் அவரது மகன் பள்ளிக்கூடம் விட்டு வந்திருந்தான். தந்தை பையனைப் பார்த்து, "என்ன பள்ளிக்குச் சென்று வந்துவிட்டாயா? இன்று என்ன பாடம் படித்தாய். மற்றவர்களிடம் நீ நல்லவனாக நடந்துகொள்ள வேண்டும்" என்றார். "சரி அப்பா!" என்றான் பையன். "சரி, எனது மேசையின் மேல் உள்ள டயரியை எடுத்து வா. போன் பேச வேண்டும்" என்றார் தந்தை. பையன் தயங்கியபடியே "அப்பா, அந்த டயரியில் என்ன இருக்கிறது?" என்றான்.

"அந்த டயரியில் முக்கியமானவர்களின் முகவரி, போன் நம்பர் உள்ளது" என்றார் தந்தை. "அப்பா அந்த டயரியில் எனது பெயர் உள்ளதா" என சட்டென கேட்டான் பையன். சாட்டையால் அடித்தது போல இருந்தது தந்தைக்கு. அவரால் எதுவும் பேச இயலவில்லை. வாழ்க்கை என்னும் பாதையில் வேகமாக ஓடும் நாம், உறவுகளையும், பந்தங்களையும் சற்று ஒதுக்கி வைத்துள்ளோம் என்பது சரிதான். சிலர் உறவுகளை புறக்கணிப்பதும் உண்டு.

எதற்காக வாழ்கிறோம்? வேலைக்காகவா? அல்லது வேலை பார்ப்பதற்காக வாழ்கிறோமா? இல்லை குடும்பத்துக்குச் சம்பாதிக்கவா இந்த ஓட்டம். வேகம், போட்டி, நேரமின்மை, நெருக்கடி இதற்கு எல்லாம் எது மூலம்? ஆசைதான் காரணம் எனக் கூறலாம். சாதிக்கப் பிறந்தவன் என அடையாளம் காட்ட வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லலாம். மனிதர்கள் ஆசையின் பின்னால் ஓடுகிறார்கள். இந்த சமுதாயம், ஆசைகளின் பின்னால் மனிதர்களை ஓட வைக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு தேவை இருக்கிறது. தொழிலாளியாக வேலை செய்பவர், தானும் ஓர் ஆலை அமைக்க வேண்டும் என எண்ணுகிறார். ஆலை உரிமையாளர்கள் மேலும் வேறு ஓர் ஆலையை நிறுவ வேண்டும் என எண்ணுகிறார்கள். மனிதர்கள் ஆசை என்னும் கடலில் நீந்தி வெற்றி பெற வேண்டும் என ஓடுகிறார்களா?

இன்று நமது தேவைகள் அதிகரித்துவிட்டன. ஆனால், ஒன்றை நாம் மறந்து விட்டோம். பணம் என்பது நமது தேவையைப் பூர்த்தி செய்யாது. மாறாக, அது நமது தேவையை விரிவடையச் செய்யும். எது நமது தேவை? அதற்கு எதுவும் எல்லை உண்டா அல்லது எல்லையை வகுத்துக் கொள்ளாமல் நாம் ஓடிக் கொண்டிருக்கிறோமா?

நண்பர் ஒருவர் காரை வேகமாக ஓட்டி சென்றார். பொலிஸ்காரர்கள் பல இடங்களில் நிறுத்தி எச்சரித்தார்கள். இனி வேகமாக ஓட்டினால் அபராதம் விதிப்போம் என பொலிஸார் கூறினர். எனினும், அவர் வேகமாகச் செல்வதை நிறுத்தவில்லை. "ஏன் இப்படி? பொலிஸ்காரர் முதல்முறை எச்சரித்ததும் வேகத்தைச் சற்று குறைத்திருக்கலாமே" எனக் கேட்டேன். "வேகமாகச் செல்லாவிட்டால் நாம் செல்ல வேண்டிய இடத்தை குறிப்பிட்ட நேரத்தில் அடைய முடியாது" என்றார். நான் அவரிடம் முயலும், ஆமையும் கதையைக் கூறினேன். "அது சிறுவர்களுக்கான கதை. இன்று நாம் ஓடாவிட்டால், நம்மைப் பிடித்துத் தள்ளிவிட்டு வேறு நபர் ஓடி விடுவார். இதுதான் இன்றைய யதார்த்தம்" என்றார் நண்பர்.

வாழ்க்கையின் இலட்சியமென்ன? சந்தோஷமா? மனநிறைவா? மனித உறவிலா? சிறு சிறு சாதனைகளிலா? பிறர்க்கு உதவுவதிலா? பணம் சம்பாதிப்பதிலா? நமது வாழ்வின் அர்த்தம் என்ன? இதனை நமது எண்ணம் என்னும் உரைகல்லில் உரசிப் பார்த்து செயல்பட வேண்டும். ஆனால் ஒன்று. ஓட்டப் போட்டியில் ஓடாவிட்டால் நீங்கள் வெற்றி பெற இயலாது. வாழ்க்கையில் ஓடிக் கொண்டே இருந்தால் வாழ்வின் பயனை அனுபவிக்கவும் இயலாது.

## சுஸ்ருதர் – உலகின் முதல் அறுவை சிகிச்சை நிபுணர்!




உலகின் முதல் அறுவை சிகிச்சை நிபுணர் என்று சுஸ்ருதரை குறிப்பிடுகிறார்கள். இவர் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் தோன்றியவர். இந்தியா வாரணாசியில் வாழ்ந்தவர். பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின் தந்தையென்றும் மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சை செய்வதில் கைதேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

கண்புரை நீக்குவது, சிறுநீரகக் கற்கள் நீக்குவது மற்றும் எலும்பு முறிவுகளைச் சரிப்படுத்துவது போன்றவற்றில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

சுஸ்ருதா ஸம்ஹிதா என்னும் நூலை இவர் இயற்றியதாகச் சொல்லப்படுகிறது. இந்த நூலில் 101 வகையான அறுவை சிகிச்சை உபகரணங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. கருவிகளின் அமைப்பு எந்தப் பறவை மற்றும் விலங்கின் வடிவத்தில் உள்ளதோ அந்த விலங்கு அல்லது பறவையின் பெயரையே கருவிகளுக்கு வைத்துள்ளார். சில கருவிகளின் பெயர்கள் இன்றும் இவர் வழங்கிய பெயர்களிலேயே உள்ளன.




## அறிமுகமாகியது சூரியப் படலத்தில் செயற்படும் மடிக்கணினி!



தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக கணினிகளின் அளவு சுருங்கி இன்று டப்லட் வரை சிறிதாக மாறியுள்ளது. இந்நிலையில் அவற்றின் பாவனையை மேலும் இலகுபடுத்தும்பொருட்டு மேலும் பல தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க தற்போது சூரியப்படலத்தில் செயற்படக்கூடிய மடிக்கணினிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நீடித்து செயற்படக்கூடிய மின்கலம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் 2 மணிநேரம் சூரிய ஒளியில் வைத்த பின்னர் சுமார் 8 தொடக்கம் 10 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாகச் செயற்படக்கூடிய சக்தியை குறித்த மின்கலம் வழங்குகின்றது.

WeWi Telecommunications எனும் கனடிய நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இக்கணினிகளின் விலை 300 டொலர்கள்.

## விண்டோஸ் லோகோ கீ பயன்பாடு



விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில், அதன் சின்னத்துடன் ஒரு கீ, கீ போர்டில் தரப்பட்டிருக்கும். இதனைத் தனியாகவும், மற்ற கீகளுடனும் இயக்கி சில செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். கீழே அந்த ஹோர்ட்கட் கீகளும் அவற்றிற்கான செயற்பாடுகளும் தரப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை நீங்கள் அடிக்கடி மேற்கொள்ளும் சூழ்நிலைகளும் உங்கள் செயற்பாட்டில் இருக்கலாம். எனவே கவனத்துடன் இவற்றை நினைவில் கொண்டு பயன்படுத்துங்கள்.

விண்டோஸ் லோகோ கீ தனியாக - ஸ்டார்ட் மெனு திறக்கவும் மூடவும். Pause கீயுடன் - சிஸ்டம் ப்ரொப்பர்ட்டீஸ் டயலாக் பொக்ஸ் திறக்கப்படும்.

D கீயுடன் - டெஸ்க்டொப் காட்டப்படும். அப்போது இயங்கும் புரோகிராம்கள் அனைத்தும் சுருக்கப்பட்டு டாஸ்க்பாருக்குச் செல்லும். மீண்டும் அழுத்த, புரோகிராம்களின் விண்டோ கிடைக்கும்.

M கீயுடன் - அனைத்து விண்டோக்களும் சுருக்கப்பட்டு டாஸ்க்பாருக்குச் செல்லும்.

Shift + Mகீகளுடன் - சுருக்கப்பட்ட புரோகிராம் விண்டோக்கள் திரைக்கு மீண்டும் வரும். E கீயுடன் - கணினி திறக்கப்படும்.

F கீயுடன் - பைல் அல்லது•போல்டர் •தேட Ctrl + Fகீகளுடன்- நெட்வேர்க்கில் இருந்தால், கணினியைத் தேட L கீயுடன் - கணினியை பூட்டி வைக்கும். அல்லது பயனாளரை மாற்றும்.

R கீயுடன் - Run டயலாக் பொக்ஸ் திறக்கப்படும்.

Tகீயுடன் - டாஸ்க்பாரில் உள்ள புரோகிராம்களுக்கு ஒவ்வொன்றாகச் செல்லும்.

நம்பர் கீயுடன் - டாஸ்க் பாரில் பின் செய்யப்பட்ட புரோகிராம்களுக்கு, அதன் வரிசையில் அந்த எண் உள்ள புரோகிராம் செல்லும்.

Shift + நம்பர் கீயுடன் - புரோகிராமின் இன்னொரு இயக்கம் திறக்கப்படும். எந்த எண் கீ பயன்படுத்தப்படுகிறதோ, அந்த எண் வரிசையில் உள்ள புரோகிராம் திறக்கப்படும்.

Ctrl + நம்பர் கீயுடன் - எண் கீ அடிப்படையில், டாஸ்க்பாரில் உள்ள வரிசைப்படி, இறுதியாக இயங்கிக்கொண்டிருந்த புரோகிராமிற்குச் செல்லும்.

Alt + நம்பர் கீயுடன் - எண் கீ அடிப்படையில், வரிசையில் அந்த எண் உள்ள புரோகிராமினை இயக்க ஜம்ப் லிஸ்ட் திறக்கப்படும். Tab கீயுடன் - டாஸ்க் பாரில் உள்ள புரோகிராம்கள் ஒவ்வொன்றாகச் செல்லும். இதற்கு Aero Flip 3D பயன்படுத்தப்படும்.

Ctrl + Tab கீயுடன் - டாஸ்க் பாரில் உள்ள புரோகிராம்கள் ஒவ்வொன்றாக அம்புக் குறி கீ பயன்படுத்திச் செல்லும். இதற்கு Aero Flip 3D பயன்படுத்தப்படும்.

Ctrl+B கீயுடன் - நோட்டிபிகேஷன் ஏரியாவில் மெசேஜ் காட்டிய புரோகிராமிற்கு மாறும்.

Spacebar கீயுடன் - டெஸ்க்டொப் பிரிவியூ கிடைக்கும்.

Up Arrow கீயுடன் - விண்டோ பெரிதாக்கப்படும்.

Left Arrow கீயுடன் - திரையின் இடது பக்கம் விண்டோ பெரிதாக்கப்படும். Right Arrow கீயுடன் - திரையின் வலது பக்கம் விண்டோ பெரிதாக்கப்படும். Down Arrow கீயுடன் - இயங்கும் விண்டோ மினிமைஸ் செய்யப்படும். Home கீயுடன் - இயங்கும் விண்டோ தவிர மற்ற அனைத்தும் மினிமைஸ் செய்யப்படும். Shift + Up Arrow கீயுடன் - விண்டோ திரையின் மேல்கீழாக இழுத்து வைக்கப்படும்.

## பேஸ்புக்கில் சிறந்த நண்பர்களை கொண்டிருப்பதற்கான சில வழிகள்!

நேரடியாக பழகும் நல்ல நண்பர்களை தக்க வைத்துக்கொள்வதற்கு சில வழிமுறைகள் உள்ளது. அதேபோல் பேஸ்புக்கிலும் நல்ல நண்பர்களை தக்க வைத்துக்கொள்வதற்கு அவர்களுடன் நீங்களும் ஒரு நல்ல நண்பராக தொடர்ச்சியாக தொடர்பில் இருக்கவும் சில வழிமுறைகள் உள்ளன. Mashable தளத்தில் பட்டியலிடப்பட்டிருந்த சில இலகுவான வழிமுறைகளே இவை.




1. நண்பரின் அனைத்து புரோபைல் படத்திற்கும் லைக் செய்து கருத்தும் எழுதவேண்டும்.

2. பேஸ்புக்கில் சண்டையிடவேண்டாம். பேஸ்புக் நண்பருடன் சண்டையிட்டால் அதை ஒரு அருவருக்கத்தக்க செயலாகவே ஏனையவர்களும் கருதுவர். இதனால் நல்ல பல நண்பர்களை இழக்கநேரிடும்.

3. பேஸ்புக் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டும் நண்பர்களின் நிகழ்வுகளுக்கு மறக்காமல் செல்ல வேண்டும். குறைந்தது நிகழ்வுப் பகுதிக்குச் சென்று கருத்திடவாவது செய்ய வேண்டும்.

4. ஆபாச வார்த்தைகளை ஸ்டேடஸ் அப்டேட்ஸாக இடுவதைத் தவிருங்கள்.

5. நேரடியாக பிறந்தநாள் வாழ்த்தை கூறியிருந்தாலும் பேஸ்புக்கிலும் சென்று வாழ்த்து தெரிவிக்க மறக்காதீர்கள்.

6. பழைய புகைப்படமொன்றை லைக் செய்யவோ கருத்திடவோ வேண்டாம்.

7.ஹேக் செய்யப்பட்டிருப்பதாக உணர்ந்தால் நண்பருக்கு உடனே தெரிவியுங்கள்

## கணினியைப் பயன்படுத்துபவர்கள் மேற்கொள்ளும் தவறுகள் இவைதான்!



கணினிகள் இன்றைய கால கட்டத்தில் நம் உடனுறை நண்பனாக மாறிவிட்டது. மனைவி, குழந்தைகளைக் கூட கை பிடித்து அழைத்து வராத பலர், இதனை பையில் போட்டு முதுகில் பத்திரமாகத் தூக்கிக் கொண்டு செல்வது நாம் அன்றாடம் பார்க்கும் காட்சி. இருந்தும், நாம் அந்த கணினியின் முழுத் திறனையும் பயன்படுத்தும் வகையில், அதனை வைத்திருக்கிறோமா? பராமரிக்கிறோமா? அதில் மேற்கொள்ள வேண்டிய சில முக்கிய வேலைகளை அவ்வப்போது செயற்படுத்தி வருகிறோமா? என்றால், நிச்சயமாய் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி, நாம் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய, ஆனால் பெரும்பாலானவர்கள் மேற்கொள்ளாத சில வேலைகளை இங்கு காணலாம்.

**1. கணினி, கீபோர்ட், மொனிட்டர் திரை:**

உங்கள் கணினியை நீங்கள் சுத்தமாக வைத்திருக்கிறீர்களா? கணினியைச் சுற்றிப் பரவும் தூசியும் அழுக்கும், கம்ப்யூட்டர் சிபியுவில் புகுந்து, உள்ளே வெப்பத்தினைத் தணிக்க இயங்கும் மின் விசிறிகளின் செயற்திறனைக் குறைக்கும்.

இதனால், கணினியின் செயல் திறனும் குறையும். சுத்தப்படுத்துவதற்கான பொருட்களைத் தயார் செய்து வைத்துக் கொண்டு, கணினியை ஷட் டவுண் செய்து, மின் இணைப்பிலிருந்து நீக்கி, ஸ்குரூக்களை நிதானமாகக் கழற்றி, உள்ளே சேர்ந்திருக்கும் தூசியையும், அழுக்கையும் அகற்றவும்.

உள்ளே மின்விசிறியிலும், வெளியே வெப்பம் வெளியேறும் துவாரங்களிலும் நிச்சயம் அதிகமாகத் தூசு தென்படும். இவற்றை நீக்கிச் சுத்தப்படுத்த வேண்டும். குறைந்த அளவில் வேகமாக காற்று அடிக்கும் கருவியைப் பயன்படுத்தி, சிபியு மின்விசிறி, மதர் போர்ட் மற்றும் கிராபிக்ஸ் போர்ட் ஆகியவற்றில் படிந்துள்ள தூசியை நீக்கவேண்டும். வேறு இடங்களில் படிந்துள்ள தூசியையும் நீக்கவும்.

அடுத்ததாக கீபோர்ட். இதனைக்கழட்டி, தலை கீழாகக்கவிழ்த்து, சிறியதாகத்தட்டினால், நம்மை அறியாமல் கீகளுக்கிடையே உள்ள இடைவெளியில் சென்ற சிறிய தூசுகள் எல்லாம் வெளியேறும்.இங்கும் காற்றடிக்கும் சிறிய கருவியின் மூலம் தூசியை வெளியேற்றவும். சிறிய பேப்பர் டவலில் தண்ணீர் அல்லது பெற்ரோல் நனைத்து, கீகளின் மேலாகவும், பக்கவாட்டிலும் சுத்தம் செய்திடவும். குறிப்பாக நம் விரல்கள் கீகளின் எந்த இடத்தில் தொடுகிறதோ, அந்த இடங்களில் அழுக்கு சேர்ந்திருக்கும். இதனைக் கட்டாயம் நீக்க வேண்டும்.

இதேபோல மவுஸ் சாதனத்தையும் சுத்தப்படுத்தவும். இறுதியாகக்கவனிக்க வேண்டியது மொனிட்டர். மைக்ரோ பைபர் துணி கொண்டு இதனைச் சுத்தம் செய்திடலாம். இதனை நீர் அல்லது வினீகரில் நனைத்து, திரையையும் சுற்றி உள்ள பகுதியையும் சுத்தம் செய்திட வேண்டும்.

**2. Data backu:**

இந்த டிப்ஸ்தான் முதலில் இருக்க வேண்டும். உங்கள் கணினி ஆண்டாண்டு காலம் இயங்கிக் கொண்டே இருக்காது. ஒரு நாளில், முடங்கிப் போய் தன் இயக்கத்தை நிறுத்திவிடும். உள்ளே நாம் சேர்த்து வைத்த முக்கிய பைல்களை நம் பயன்பாட்டிற்கு எடுக்க இயலாமல் போய்விடும்.

என்ன செய்தாலும், அதில் உள்ள பைல்கள் கிடைக்காத நிலை ஏற்படும். எனவே, நம் உழைப்பின் கனிகளான அந்தப் பைல்கள் உங்களுக்கு வேண்டும் எனில், அவற்றை உருவாக்கியவுடனேயே, அதற்கு பேக் அப் எடுக்க வேண்டும்.

இதற்கு பேக் அப் சொப்ட்வேர் பயன்படுத்தலாம். அல்லது, நாமே விழிப்புடன் இருந்து, ஒன்றுக்கு இரண்டாக நல்ல பிளாஷ்ட்ரைவ் அல்லது எடுத்துச் செல்லக் கூடிய ஹார்ட் ட்ரைவ்களில் நம் டேட்டா பைல்களை பேக் அப் எடுக்க வேண்டும்.

**3. மால்வேர் பாதுகாப்பு:**

நான் அனைத்து பாதுகாப்பு வழிகளையும் கையாள்கிறேன். சந்தேகத்திற்கிடமான இமெயில்களைத் திறப்பதில்லை தேவையற்ற தளங்களைப் பார்ப்பதில்லை எனக்கு இதுவரை மால்வேர் புரோகிராம்களே வந்ததில்லை என்று நீங்கள் உறுதியாக இருந்தாலும், உங்கள் கணினி இந்த வகையில் அடிபடும் வாய்ப்புகள் அதிகம்.

நீங்கள் என்னதான் கவனமாக இருந்தாலும், ஏதேனும் ஒரு சிறிய செயற்பாடு, உங்கள் கணினிக்கு வைரஸைக் கொண்டுவரலாம். எனவே, அன்டி வைரஸ், அன்டி மால்வேர் புரோகிராம்களை இன்ஸ்டோல் செய்து கட்டாயம் பயன்படுத்த வேண்டும்.

இதற்கென இலவச புரோகிராம்கள் மட்டுமின்றி, கட்டணம் செலுத்திப்பெறும் புரோகிராம்களும் கிடைக்கின்றன. இவற்றில் எதனைத்தேர்ந்தெடுத்து தொடர்ந்து இயக்கிவந்தாலும், அவற்றை அவ்வப் போது இணைய இணைப்பு கொடுத்து அப்டேட் செய்திட வேண்டும். இல்லையேல் பயன் இருக்காது.

**4. சொப்ட்வேர் அப்டேட்:**

சொப்ட்வேர் என்பது சொக்லேட் பால் மாதிரி. முதலில் அதனை மிக மிக விரும்புவீர்கள். அடிக்கடி பயன்படுத்துவீர்கள். நாள் ஆக ஆக, அதன் தன்மை மாறும். நம்பகத்தன்மை குறையும். பாதுகாப்புக் கிடைக்காது.

எனவே எந்த ஒரு பயன்பாட்டு சொப்ட்வேர் புரோகிராமினையும், அப்டேட் செய்திட வேண்டும். நீங்கள் என்ன செய்திட வேண்டும் என அந்த சொப்ட்வேர் தொகுப்பினை உருவாக்கி, அப்டேட் தரும் நிறுவனம் கற்றுக் கொடுக்கும். எனக்குப் பழையதே போதும் என ஒருநாளும் இருக்க வேண்டாம்.

# குடாநாட்டில் மீண்டும் மிடுக்குடன் வளரத் தொடங்கும் பரதக்கலை

## - பேராசிரியர் சிவலிங்கராஜா

(யாழ்.நிருபர்)

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் யாழ்ப்பாணத்தில் கலைகள் துளிர்க்கத்தொடங்கியுள்ளன. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்று தற்போது பரதக் கலை யாழ். மண்ணில் வளரத் தொடங்கியுள்ளது. இக் கலையை மேலும் வளர்ப்பதற்கு பிள்ளைகளுக்கு உறுதுணையாக நின்று பெற்றோர் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு செல்வி பிருந்தா ரவீந்தினி யூட் சாந்தராஜ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா குறிப்பிட்டார்.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் சிவலிங்கராஜா தொடர்ந்து பேசுகையில்:

பரதம் ஓர் அற்புதமான சிறந்த கலை எமது பண்பாட்டின் முகங்களில் பரதமும் ஒன்று பாவம், இராகம், தாளம் இணைந்து பரதம் ஆகியது என்று கூறுவர் அற்புதமான இந்த ஆடற் கலையை தெய்வீகக் கலையாக நம்முன்னோர் கண்டனர்.

நமது பண்பாட்டிலே அரங்கேற்றம் என்னும் நிகழ்வு நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. எல்லாக்கலைகளுக்கும் அரங்கேற்ற நிகழ்வுகள் இருந்தன. இன்று ஆற்றுகைக் கலைகளோடு அவை மட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

கலை வல்லுனர்கள், அறிஞர்கள், மூத்தவர்கள், உறவினர்கள் எனும் பல்வேறு தரத்தினருக்கும் முன்னால் தாம் பயின்ற கலையை அரங்கேற்றிய பின்னரே அங்கீகரிக்கப்பட்ட வித்தகராகச் சமூகத்திலே அவர் மதிக்கப் படுவார்.

தாரமும் குருவும் தலைவிதி என்ற தமிழ்ப் பழமொழி மிகவும் அர்த்தபுஷ்டி உடையது செல்வி பிருந்தா ரவீந்தினிக்கு ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் குருவாக வாய்த்தது உண்மையில் ஆண்டவனின் அருட்கிருபை என்றே கருதுகிறேன். அவரது வழி காட்டலில் இன்று உலக நடன அரங்கிற்கு சிறந்த தாரகை உருவாகியிருக்கிறாள் இலக்கியங்களில் வரும் நவரசபாவங்களை அதி அற்புதமாக அரங்கத்தில் வெளிப்படுத்தியிருந்தார் ஈழத்திற்கென தனித்துவமான சில முத்திரைகளை அவர் ஆற்றுகை செய்தமை பாராட்டுக்குரியது என்றார்.

நாட்டிய கலாமந்திர் இயக்குநர் ஸ்ரீமதிவாசுகி ஜெகதீஸ்வரன் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (10)

# யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக மோட்டார் பந்தய நிகழ்வு

யாழ். நகரத்தில் முதன்முதலாக இடம்பெறவுள்ள மோட்டார் பந்தய நிகழ்வான Jaffna Speed Festival 2013 எதிர்வரும் செப்டெம்பர் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இலங்கை மோட்டார் வாகன விளையாட்டு சங்கம் மற்றும் இலங்கை மோட்டார் சைக்கிள் விளையாட்டு சம்மேளனம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்ட நிகழ்வு ஏற்பாட்டு அனுமதிப்பத்திரத்தின் கீழ் மோட்டார் பந்தய அமைப்பு மற்றும் ஆசிய மோட்டார் பந்தயக் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கார்ல்டன் மோட்டார் விளையாட்டுக் கழகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைப் பிரஜைகள் மற்றும் இலங்கையில் வசிக்கும் உரிமையைக் கொண்டுள்ள எவரும் இந்த மோட்டார்ப் பந்தய நிகழ்வில் கலந்துகொள்ளும் தகைமையைக் கொண்டுள்ளதுடன், இது இலங்கை மோட்டார் வாகன விளையாட்டு சங்கத்தின் வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாகவும் இடம் பெற்றுள்ளது. யாழ். நகரிலிருந்து ஆரம்பிக்கும் இந்த மோட்டார் பந்தய ஓடுபாதையானது 200 கிமீ வரையான மொத்த தூரத்துடன் அமைந்துள்ளதுடன், பல்வேறு கட்டங்களாக போட்டிகள் இடம்பெறவுள்ளன. இது விசேட சட்டங்களையும், போக்குவரத்துச்சட்டங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

# யாழ்ப்பாண இசைக்கலைஞருக்கு தமிழ்நாட்டில் விருது வழங்கல்

(யாழ். நிருபர்)

தமிழ்நாடு காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற திருக்கோயில்கள் வளர்த்த அனைத்துலக தெய்வத்தமிழ் 11 ஆவது ஆய்வு மாநாட்டில் யாழ்ப்பாணத்து இசைக்கலைஞரான ந.வீ மு. நவரத்தினத்துக்கு "தெய்வத் தமிழிசைப்போராளி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக இசைத துறை விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவருக்கு இசைத துறைக்கு ஆற்றிய பணிக்காக தமிழ்நாடு திருவையாறு தமிழ் ஐயாகல்விக்கழகம் காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி மலேசியா கோலாம்பூர் மகா மாரியம்மன் கோவில் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய மேற்படி மாநாட்டில் 400இற்கும் மேற்பட்ட பன்னாட்டு அறிஞர்கள் கலந்து கொண்ட ஆய்வு மாநாட்டிலேயே இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# சாரதி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

சுற்றாடல் அமைச்சின் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் நிரந்தர ஊழியர் இல்லத்தில் சாரதி III தரம் உதவியாளர்கள் தரம்III இற்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமை- சிங்களம் ,தமிழ்மொழி மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் க.பொ.த (சா/த) பரிட்சையில் சித்தியுடன் ,சாரதி அனுமதிப் பத்திரத்துடன் 03 வருட சாரதி அனுபவம்(சாரதி விண்ணப்பத்திற்கு மட்டும்)

அனைவரும் வயது 18இற்கும் 45இற்கும் உட்பட்டவராகவும் இருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் இரு நற்சான்றுகளுடன், உறவினர் அல்லாத இருவர் பெயருடன், பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ் பிரதிகள்,ஏனைய தகுதிச்சான்றிதழ்களுடன் 23.08.2013க்கு முன்னர், தவிசாளர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,இல.758 2ஆம் மாடி பேஸ் லைன் வீதி,கொழும்பு 9 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவேண்டும்.

தற்போது அரச பிரிவு சேவையில் உள்ளோர் தமது நிறுவனத்தலைவருடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.(105)



ரம்ழான் அல் குர் ஆன் போட்டியின் பரிசளிப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் எம்.எஸ். ஏ.எம். முபாரக் தலைமையில் நடைபெற்றது இதில் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் வெற்றியீட்டிய மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (105)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு மடாலயத்தில் நான்கு துறவிகள் மௌனம் விரதம் பூண்டு தியானத்தில் அமர்ந்தார்கள்.

யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசக்கூடாது என்ற வாக்குறுதிக்குப் பின்தான் அவர்கள் அவ்வாறு அமர்ந்தார்கள்.

நால்வருக்கும் நடுவில் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

அங்கே பரிபூரண அமைதி நிலவியது.

மெழுகுவர்த்தி கரைந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் சென்றது.

முழுவதும் உருகிய மெழுகுவர்த்தி அணையும் நிலையில் படபடத்தது.

அதைக் கவனித்த ஒரு துறவி "மெழுகுவர்த்தி அணையப் போகிறது" என்று தன்னை மறந்து பேசி விட்டார்.

"நாம்பேசவே கூடாது என்பதை மறந்து விட்டீர்களா?" என்று கேட்டார் இன்னொரு துறவி.

"ஏன் இப்படி சளசளவென்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? சும்மா இருக்க மாட்டீர்களா?" என்று கோபப்பட்டார் மூன்றாவது துறவி.

"ஹா... ஹா... எதுவுமே பேசாமல் இருப்பது நான் மட்டுமே!" என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டார் நாலாவது துறவி.

மற்றவர்களைக் குற்றம் சாட்டும்போது தன் குற்றத்தை எல்லோரும் மறந்து விடுகிறார்கள்.

***   ***   ***   ***

விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீனுக்கு நன்றாக வயலின் வாசிக்கத் தெரியும். ஓய்வு நேரத்தில் வயலின் வாசிப்பது அவரது வழக்கம்.

அப்படி ஒருநாள் தன்னை மறந்து வயலின் வாசித்துக் கொண்டிருந்தபோது அவருடைய நண்பரும் ஹங்கேரி நாட்டின் பிரபல நகைச்சுவை நடிகருமான மால்நார் ஐன்ஸ்டீனைப் பார்க்க வந்தார். அவருக்கு ஐன்ஸ்டீன் வயலின் வாசிப்பதைப் பார்த்து ஆச்சரியமாகப் போய்விட்டது. இந்த மனிதரால் வயலின் வாசிக்க முடியுமா என்று எண்ணியிருப்பார் போலும். ஆகவே, வயலின் வாசிக்கும் ஐன்ஸ்டீனைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

அதைக் கவனித்த ஐன்ஸ்டீன், "நான் வயலின் வாசிப்பதைப் பார்த்து, நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்? என்றாவது நீங்கள் நகைச்சுவை வேடத்தில் நடிக்கும்போது அதைப் பார்த்து நான் சிரித்திருக்கிறேனா?" என்று அமைதியாகக் கேட்டார். அந்த நகைச்சுவை நடிகர் வாயடைத்துப் போனார்.

***   ***   ***   ***

ஒன்றாகப் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்கள், தங்கள் திறமையை சற்று மிகைப்படுத்திப் பேசிக் கொண்டனர்.

முதலாமவர், "நான் நான்காவது மாடியிலிருந்து விழுந்த பெண்ணைக் காப்பாற்றி, பிளாஸ்டிக் சர்ஜரி செய்து உலக அழகியாக்கினேன்" என்றார்.

இரண்டாமவர், "யுத்தத்தில் இரு கால்களையும் இழந்த ஒருவருக்குச் சிகிச்சை செய்து செயற்கைக் கால்கள் பொருத்தி ஒலிம்பிக்கில் தங்க மெடல் வாங்கச் செய்தேன்"

மூன்றாவது மருத்துவர் சொன்னார்: "இதெல்லாம் என்ன பிரமாதம்? நான் ஏழெட்டு மூளை ஆபரேஷன் செய்யும் போது மூளையை உள்ளே வைக்காமல் தைத்துவிட்டேன். அப்படித் தைக்கப்பட்டவர்கள்தான் இப்போது பெரிய பெரிய தலைவர்கள்"

***   ***   ***   ***

கணவன் பேர்ஸிலிருந்த மனைவி போட்டோவை அரை மணி நேரமாக பார்த்துக்கொண்டே இருந்தான்.

**மனைவி (காதலுடன்) :** எதுக்கு இவ்வளவு நேரமாய் என் போட்டோவையே பார்த்துக்கொண்டிருக்கிறீங்கள்?

**கணவன் :** எனக்கு ஏதாவது பிரச்சினை என்றால் உன் போட்டோவை இதேமாதிரிதான் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே இருப்பேன்.

**மனைவி :** வாவ்... உங்களுடைய பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிடுமா?

**கணவன் :** உன் போட்டோவை பார்த்ததுமே இவ்வளவு பெரிய பிரச்சினையையே ஈஸியா சமாளிக்கிறோம். மற்றதெல்லாம் தூசு என்று ஒரு நம்பிக்கை வந்திடும்...

***   ***   ***   ***

(யாரையாவது இனி "வா, போ' என்று பேசிப் பார் தெரியும் என்று அப்பாவால் எச்சரிக்கப்பட்ட குழந்தை பாடியது)

நிலா, நிலா வாங்கோ...
நில்லாமல் வாங்கோ...
மலை மேலே ஏறி வாங்கோ...
மல்லிகைப் பூ கொண்டு வாங்கோ...

# சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் கவனத்தில் கொள்ளப்படாதது ஏன்?

## வெலிவேரிய சம்பவம் விஸ்வரூபம் எடுக்கிறது

(கொழும்பு)

பொது மக்களின் வெகுஜனப் போராட்டங்களின்போது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் கவனத்தில் எடுக்காதது ஏன் என்று மனித உரிமைகள் கண் காணிப்பகம் கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன் வெலிவேரிய சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடாத்தப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது. சம்பவம் தொடர்பில் பிழையான தகவல்களை வெளியிடுவதனை தவிர்த்து உரிய சுயாதீன விசாரணைகளை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

சுத்தமான குடிநீரை பெற்றுத் தருமாறு கோரி போராட்டம் நடாத்திய பொது மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்தபட்சம் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

படையினர் நடத்தியதாக்குதல்களை அரசாங்கம் நியாயப் படுத்தி வருவதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

சட்டத்தை மீறிச் செயற்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடாத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முதன்மைப் பொறுப்பாகும் என அவர் சுட்டிக் காட்டிக்காட்டியுள்ளார்.

படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்திய வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக தேவாலயத்திற்குள் பிரவேசித்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களின் போது படையினர் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதித்துச் செயற்படுவதனை உறுதி செய்ய வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தொல்லை தருகிறது தொலைபேசி அழைப்புக்கள்

## பரீட்சைத் திணைக்களத்துக்கு தலையிடி

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுவரும் கல்விப பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பரீட்சைகள் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ள அவசர அழைப்புக்கு தொல்லைதரும் அழைப்புக்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி குற்றப்புலனாய்வுப் பிரிவை கல்வி அமைச்சு கேட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தீயநோக்கம் கொண்ட சிலர், பரீட்சை தொடர்பாக பொய்ப் பிரசாரங்களை மேறகொண்டு வருவதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார். உயிரியல், வினைத்திறன், பொறியியல், பௌத்த நாகரீகம் போன்ற வினாத்தாள்கள் ஐந்து காணப்பட்டதாக பொய்ப் பிரசாரம் செய்யப்படுகின்றது.

நாம் இன்னும் பௌத்த நாகரிகம் வினாத்தாளை அச்சிடக்கூட வில்லை. இந்த பிரசாரத்தின் பின் உள்ளவர்களை கண்டுபிடிக்கும்படி குற்றப்புலனாய்வுப் பிரிவை கேட்டுள்ளோம். ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, உயர்தரப் பரீட்சை பற்றி எழுப்பிய கேள்விக்கு பதில ளிக்கும்போதே கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சரியான தருணத்தில் உறுதிமிக்க சேவை ஜனசக்தி நிறுவனத்துக்கு தரச் சான்றிதழ்

(கொழும்பு)

முன்னணி காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி நிறுவனம் அதன் தரமான காப்புறுதி தலைமையை தொடருகிறது. இத்துறையில் தரத்தை விருத்தி செய்யும் இலக்கினைக் கொண்டதும், ISO தரத்தை பெறும் இலங்கையின் முதல் காப்புறுதி வழங்குனராக ஜனசக்தி நிறுவனம் திகழ்கிறது. அண்மையில் இலங்கை வெரிடாஸ் பணியகத்தி னால் (Bureau Veritas Lanka) நடாத்தப்பட்ட மீள்சான்றிதழ் கணக்காய்வுகளை (Recertification Audit) தொடர்ந்து ஜனசக்தி நிறுவனத்திற்கு ISO 9001:2008 மீள சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தரமான காப்புறுதிக்கு அவசியமான கடுமையான மேலாண்மை கட்டமைப்பை நடைமுறை படுத்தும் நிறுவனங்களே ISO தரத்தை பெறுவதற்கான தகுதியை பெறும்.

ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைததுவ பணிப்பாளர் பிரகாஷ ஷா:ப்ட்டர் கருதது தெரிவிக்கையில், சரியான நேரத்தில் தேவைகளை பூர்த்தி செய்யும் வணிக நிறுவனத்துடன் வியாபாரத்தை மேற்கொள்கிறோம் என்பதை வாடிக்கையாளர் உறுதிப்படுத்தல் வேண்டும். ISO 9001:2008 மீள் சான்றிதழை பெறுவதற்கு அவசியமான இக் கடுமையான செயல்முறையை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் மூலம் எமது உயர்தர சேவை மற்றும் வாடிக்கையாளர்களின் உயர்மட்ட திருப்தி போன்றவற்றை வழங்க எமது நிறுவனம் உறுதி கொண்டுள்ளது என்பது நிரூபனமாகிறது என தெரிவித்தார்.

சிறந்த ISO 9001:2008 ஆவணமாக்கலானது தரகையேடு மற்றும் தரமான நடைமுறைகளை பயன்படுத்துவோருக்கு இலகுவில் கையாளக்கூடிய ஓர் ஆவணமாக ஒன்றிணைக்கிறது. மேலும் செயல்முறைகள் மற்றும் செயற்பாட்டு செயல்முறைகளின் தொடர்ச்சியான அபிவிருத்திகள் ஊடாக செயற்பாட்டுச் செலவுகள் குறைக்கப்படுகிறது. அலுவலக ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள் ஊடாக பங்குதாரர்களுக்கு இடையேயான தொடர்பு அதிகரிக்கிறது. மேலும் அது சட்டபூர்வமான மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட தேவைகள் எவ்வாறு நிறுவனம் மற்றும் வாடிக்கையாளர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை புரிந்து கொள்வதன் மூலம் சட்டரீதியான இணக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

# இணையம் ஊடான வங்கிச் சேவை எச்.எஸ்.பி.சி. முன்னணியில்

(கொழும்பு)

இணையம் மூலம் சிறந்த வங்கிச் சேவையை வழங்கும் முன்னணி நிறுவனமாக H.S.B.C வங்கி மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

நாட்டின் இணையத்தள வங்கிச் சேவைகளை வழங்கும் வழங்கும் சிறந்த வங்கியாக HSBC தொடர்ந்தும் எட்டாவது ஆண்டாக குளோபல் :பினான்ஸ் சஞ்சிகையின் மூலம் இந்த வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

HSBC வங்கியின் இணையத்தளமானது மிகவும் இலகுவான வகையிலும், விரைவாகவும் வாடிக்கையாளர்களுக்குத் தகவல்களை திரட்டிக் கொள்ளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என HSBC யின் அட்டைகள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பிரிவின் தலைமை அதிகாரி ஜேம்ஸ் ரிபர்ட் தெரிவித்துள்ளார்.







# பாராட்டி வாழ்த்துகின்றோம்

மூன்று தலைமுறைக்கு மேலாக இது வரைக்கும் எமது கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்கவில்லை. தற்பொழுது எமது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியினால் எமது கிராமத்திற்கு மின்ஒளியை கடந்த 09.08.2013 வெள்ளிக் கிழமை ஏற்றி வைத்துள்ளார். அவரை இந்நாளில் எமது பூம்புகார் கிராமத்து மக்களாகிய நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அடுத்து எமது கிராமத்திற்கு பலவழிகளிலும் மின்சாரம் வழங்குவதற்கு உதவியாக இருந்த யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்றின் (S.A.உதயன்) அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (வடக்கு மாகாணசபை வேட்பாளர் (இல 10) ) அவர்களிற்கும் இந்நாளில் பாராட்டுக்களை தெரிவிப்பதோடு அவர் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற பூம்புகார் மக்கள் சார்பில் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து எமது கிராமத்து மக்களோடு மக்களாக நின்று நேரகாலம் பாராது எமக்கு மின் சாரம் பெற்றுத்தருவதற்கு உதவியாக இருந்த நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.ரவீந்திரதாசன் (ஜே.பி) அவர்களிற்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு நன்றியுடையவர்களாகவும் இருப்போம் என்பதையும் இந்நாளில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பூம்புகார் வாழ் மக்கள்,**
**பூம்புகார் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**பூம்புகார் கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**பூம்புகார் கடற்தொழில் சங்கம்,**
**பூம்புகார் சனசமூக நிலையம்.**

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

பொது அறிவுப் பரீட்சை

1) மியான்மாரில் ஜனநாயகத்திற்கு போராடும் பெண்மணி ஆன்சான் சூகி ஆவர். இவர் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A. இவர் மியான்மாரில் ரங்கூன் நகரில் 1945 இல் பிறந்தார்.
B. இவரது பெயரில் 3 உறவினரின் பெயர்கள் உள்ளன.
C. 1989 இலிருந்து 15 வருடம் வீட்டுக்காவலில் இருந்தார்.
இவற்றுள் சரியானவை?
1) A மட்டும் 2) B மட்டும்
3) C மட்டும் 4) A யும் B யும் 5) எல்லாம்

2) ஐ.நா மனித உரிமை அமைப்பின் கூட்டம் ஜெனிவாவில் நடைபெற்றது. மனித உரிமை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.
A. ஜெனிவாவில் 19 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றது.
B. ஐ.நா மனித உரிமைச் சபைக்கான இலங்கைத் தூதுவர் தமராகுணநாயகம் ஆவார்.
C. இக் கூட்டத்தொடரில் இலங்கையை எதிர்த்து 24 நாடுகள் வாக்களித்தன.
D. இக் கூட்டத்தொடரில் இலங்கையை ஆதரித்து 20 நாடுகள் வாக்களித்தன.
இதில் சரியானவை
1) A யும் B யும் 2) B யும் C யும்
3) ABC 4) ABD 5) BCD

3) இலங்கையின் மிகமுக்கிய தொலைபேசி இலக்கங்கள் பற்றிய பின்வரும் தரவுகளைக் கருதுக.
A. இலங்கை தகவல் திணைக்கள தொலைபேசி இலக்கம் 1919 ஆகும்.
B. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் அறிவிக்கும் தொலைபேசி இலக்கம் 1929 ஆகும்.
C. போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுபடும் ஆலோசனைக்கான தொ.பே: 1948
D. போக்குவரத்துச் சேவையில் மக்கள் குறைகளை அறிவிக்கும் தொ.பே. இல: 1968
சரியானவை
1) A யும் B யும் 2) C யும் D யும்
3) A யும் D யும் 4) எல்லாம்

4) 2012 இல் ஒலிம்பிக்போட்டி லண்டனில் நடைபெற்றது. இது தொடர்பான கருத்துக்கள் பின்வருமாறு
A. யூலை 27 இலிருந்து Aug 12 வரை நடைபெற உள்ளது.
B. இது 30 ஆவது ஒலிம்பிக்காகும்.
C. 2018 இல் ரஷ்யாவில் நடைபெறவுள்ளது.
1) A 2) B 3) C
4) AB 5) எல்லாம்

5) 1940 கென்யாவின் நியோரி மாவட்டத்தில் பிறந்த வங்காரிமாதாய் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A. இவர் நோபல் பரிசைப் பெற்றவர்
B. கென்யாவின் சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்தவர்
C. கிறின்பெல்ட் என்ற சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கியவர்
D. இவருக்கு பொருளாதார நோபல் பரிசு கிடைத்தது.
1) A யும் B யும் 2) B யும் C யும் 3) C யும் D யும்
4) ABC 5) எல்லாம்

6) இலங்கையில் பெண்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A. ஆண்களைவிட பெண்கள் இலங்கையில் அதிகமாகும்.
B. இலங்கையில் 26 ஆவது புதிய சட்டமா அதிபர் "சாந்தி ஈவா வனசுந்தர"
C. இலங்கையின் 33 ஆவது நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க
சரியானவை
1) A யும் B யும் 2) A யும் C யும்
3) B யும் C யும் 4) B மட்டும் 5) எல்லாம்

07) 2011 Oct இறந்த அப்பிள் கணனி இயக்குநர் அவர் யார்?
1) பில்கேட்ஸ் 2) ஸ்டீவ்ஜெபீஸ்
3) சாள்ஸ்பவேஜ் 4) வினிசெப்ட் 5) கார்லோஸ் சிலிம்

08) பொதுநலவாய நாடுகள் பற்றி பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
1) 2011 இல் 22 ஆவது உச்சிமாநாடு அவுஸ்ரேலியா பேர்த்தில் நடைபெற்றது.
2) இவ்வமைப்பின் அடுத்த மாநாடு 2013 இல் இலங்கையில் நடைபெறவுள்ளது.
3) இவ்வமைப்பில் 54 நாடுகள் உள்ளன.
4) இதன் தற்போதைய தலைமை நாடு இந்தியாவாகும்.
5) பொதுநலவாய 2014 விளையாட்டுப்போட்டி ஸ்கொட்லாந்தின் கிளஸ்கோ நகரில் நடைபெறவுள்ளது.

09) கிரிக்கெட் போட்டி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
1) 2011 இல் 10 ஆவது உலக கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.
2) 2015 இல் அவுஸ்ரேலியா நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.
3) சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது சதத்தை மேற்கிந்திய தீவுக்கு எதிராக பெற்றுக்கொண்டார்.
4) T-20 உலக கிண்ணக் கிரிக்கெட் இவ்வாண்டு இலங்கையில் நடைபெறவுள்ளது.
5) ஒரு நாள் போட்டி ஒன்றின் ஒருவரின் அதிக பட்ச ஓட்டம் 210 ஆகும்.

10) உலக கிண்ண உதைபந்தாட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
1) 2010 இல் தென்னாபிரிக்காவில் நடைபெற்றது.
2) 2014 இல் 21 ஆவது உதைபந்தாட்டப் போட்டி பிரேசிலில் நடைபெறவுள்ளது.
3) 2018, 2022 போட்டிகள் முறையே ரஷ்யா, கட்டாரில் நடைபெறவுள்ளன.
4) உலகக்கிண்ணத்தை அதிக தடவை பிரேசில் பெற்றுள்ளது.
5) உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 1950 இல் முதன் முதல் தொடங்கின.

11) 2011 ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற பூகம்பம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. கூடிய பாதிப்பு "புக்கிசிமா" மாநிலத்தில் ஏற்பட்டது.
B. பூகம்பத்தின் காரணமாக "டாய்இச்சி" அணு உலை வெடித்தது.
C. "நான்கு நிமிடங்களில் நகரத்தின் அழிவு" என்ற தலைப்பில் நினைவுப் புத்தகத்தை ஜப்பான் வெளியிட்டது.
1) A யும் B யும் 2) A யும் C யும்
3) B யும் C யும் 4) A யும் B யும் C யும்
5) C மட்டும்

12) உலக பொப்பிசை பாடகர் மைக்கல் ஜக்சனின் இறப்புக்கு காரணமான வைத்தியர் யார்?
1) கொன்றாட்முரே 2) ஸ்ரெப்ரோ
3) எட்வேட் 4) வில்மட் 5) வட்சன்

13) இலங்கையின் வரி வீதம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக
A. தற்போதைய வற்வரிவீதம் 12% ஆகும்.
B. தனிநபர் வருமான வரி 5 இலட்சமாகும்.
C. வட்டி வருமானம் மீதான வரி 5 இலட்சத்திலிருந்து 15 இலட்சம் வரை 2.5 % ஆகும்.
1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும்
4) A யும் B யும் 5) எல்லாம்

14) இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை அளவிடப் பயன்படும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
1) ஆரம்பத்தில் 1952 ஆண்டு அடியாண்டாகக் கொள்ளப்பட்டது.
2) 2002 ஆம் ஆண்டு பின்னர் அடியாண்டாக மாற்றப்பட்டது.
3) தற்போது 2006/07 அடியாண்டாக்கப்பட்டுள்ளது.
4) இதில் இலங்கையின் அனைத்துப் பகுதியிலிருந்தும் தரவு சேகரிக்கப்படுகிறது.
5) இச் சுட்டெண் தயாரிப்பில் பண்டவகை ஐந்துக்கு மேற்பட்டதாகும்.

15) உலக பருவநிலை 17 ஆவது மாநாடு 2011 நவம்பர் 18 இலிருந்து டிசம்பர் 12 வரை நடைபெற்ற நகரம் எது?
1) டர்பன் 2) ரோக்கியோ
3) மொன்றியால் 4) கேபன்கெகன்
5) வெலிங்ரன்

16) மோட்டார் கார்களைக் கழுவும் ஒரு பொறி 18 நிமிடங்களில் 8 கார்களைக் கழுவத்தக்கது. அதே பொறி அதே வீதத்தில் 3 மணித்தியாலங்களில் எத்தனை கார்களைக் கழுவும்?
1) 13 2) 40 3) 80
4) 125 5) 405

17) மாவின் விலையை 20% இனால் கூட்டியபின்னரும் சீனியின் விலையை 5% இனால் குறைத்த பின்னரும் 1 Kg மாவினதும் 2 Kg சீனியினதும் விலைகளின் மொத்தம். விலை மாற்றத்திற்கு முன்னர் மாவினதும் சீனியினதும் விலைகளின் மொத்தத்திற்குச் சமம். விலை மாற்றத்திற்கு முன்னர் 1 Kg மாவின் விலை ரூ.60 எனின், விலை மாற்றத்திற்குப் பின்னர் 1 kg சீனியின் விலை ரூபாயில் யாது?
1) 144 2) 126 3) 120
4) 115 5) 114

18) மூன்று அடுத்துவரும் நிறையெண்களின் (முழுவெண்களின்) கூட்டுத்தொகை பின்வரும் எந்த எண்ணாகும்?

1) 17　2) 22　3) 35
4) 51　5) 70

**19, 20, 21 ஆகிய வினாக்கள் இலங்கையில் வக்சீனேற்றப்படாதவை யென மதிப்பிடப்பட்டுள்ள 1250 000 கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை பற்றிய பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

சராசரி ஒவ்வொரு 1000 நாய்களுக்கும் ஓர் ஆண்டில் 5 மனிதர்கள் கடிக்கப்படுகின்றனர். நாய்களினால் கடியுண்ட மனிதர்களில் 80% ஆனோர் சிகிச்சையைப் பெறுகின்றனர். நாயினால் கடிக்கப்படும் ஒவ்வொருவருக்கும் சிகிச்சையளிக்கப்படாவிட்டால் விலங்கு விசர்நோய் காரணமாகக் கட்டாயம் இறக்க நேரிடும் எனவும் சிகிச்சை அளிக்கப்பட்டவர்களிடையே விலங்கு விசர்நோயினால் இறந்தவர்கள் பற்றி அறிவிக்கப்படவில்லை எனவும் கொள்க.

19) நாய்க்கடிக்காகச் சிகிச்சை பெறும் ஒருவருக்காக அரசாங்கம் சராசரியாக ரூ. 350 000 ஐச் செலவிடுகின்றதெனின் நாய்களினால் கடிக்கப்படுபவர் களுக்காக ஓர் ஆண்டில் தேவையான மொத்தச் சராசரிச் செலவு எத்தனை மில்லியன் ரூபாய்?

1) 218.75　2) 175　3) 35
4) 28　5) 21.875

20) விலங்கு விசர்நோய் உள்ள நாய்கள் மொத்த நாய்க்கடிகளில் 12% இற்குப் பொறுப்பெனின், விலங்கு விசர்நோய் உள்ள நாய்களினால் ஏற்படுத்தப்படும் ஆண்டுக்கான இறப்புக்களின் மதிப்பிட்ட எண்ணிக்கை யாது?

1) 120　2) 150　3) 1000
4) 1250　5) 1500


21) வக்சீனேற்றப்படாத கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையை 10% இனால் குறைத்து அதனை அக்குறைந்த மட்டத்திலேயே பேணுவதற்கான ஒரு செயற்றிட்டத்திற்காக மதிப்பிட்ட செலவு ஓர் ஆண்டிற்கு ரூபா. 5 மில்லியன் ஆகும். இச்செயற்றிட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் ஓர் ஆண்டிற்குக் குறையுமென மதிப்பிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் செலவு எத்தனை மில்லியன் ரூபாய்?

1) 21.875　2) 18.0　3) 17.5
4) 16.875　5) 12.5

22) ஒரு சதுரமுகியின் கனவளவு x கன மீற்றராகவும் சதுரமுகியின் மொத்த மேற்பரப்பின் பரப்பளவு 2 x சதுர மீற்றராகவும் இருப்பின் சதுரமுகியின் எல்லா ஓரங்களினதும் (மீற்றரிலான) மொத்த நீளம் யாது?

1) 72　2) 48　3) 36
4) 40　5) 24

## க.பொ.த. (சாதாரண தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்




ஆர்.கே. மேனன்
(B.A, Dip.in.tea, S.L.T.S 2 -II)

**கணிதம்**

*சென்றவாரத் தொடர்ச்சி...*


(08)




ABCD ஒரு இணைகரம். DC யின் நடுப்புள்ளி E அகும். நீட்டப்பட்ட AE ஆனது நீட்டப்பட்ட BC யை F இல் சந்திக்கிறது.

i. ACFD ஓர் இணைகரம் ஆகும் என நிறுவுக.
ii. முக்கோணம் DEF, முக்கோணம் CEF என்பன சம பரப்பளவுடையன என்பதற்கான விளக்கம் தருக,
iii. முக்கோணம் CEF = ¼ இணைகரம் ABCD என நிறுவுக.

(09)





குறுக்கு வெட்டு செங்கோண முக்கோணி வடிவில் அமைந்த அரியம் ஒன்றின் நெடுக்கு வெட்டு முகமாக 3.5Cm ஆரையுள்ள உருளை வடிவம் குடைந்து அகற்றப்பட்டுள்ளது.

i. உருளையானது குடைந்து அகற்றப்படு முன்பிருந்த அரியத்தின் கனவளவு யாது?
ii. அகற்றப்பட்ட உருளையின் கனவளவு யாது?
iii. மீதியாயுள்ள திண்மத்தின் கனவளவு யாது?
iv. அரியம் ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் அடர்த்தி $4.5gCm^{-3}$ எனின் எஞ்சியுள்ள திண்மத்தின் திணிவு யாது? விடையை kg இல் தருக?

(10) i. AB=6Cm , BC=4Cm , $A\hat{B}C = 60^o$ ஆகவுள்ள $\Delta ABC$ ஐ அமைக்க.
ii. AB இன் செங்குத்து இரு கூறாக்கியை வரைக.
iii. $A\hat{B}C$ இன் இரு கூறாக்கியை வரைக.
iv. வினா ii , iii இல் நீர் வரைந்த கோடுகள் சந்திக்கும் புள்ளிக்கு O எனப் பெயரிடுக. v. O வை மையமாகவும் OA யை ஆரையாகவும் கொண்ட வட்டத்தை வரைக.
vi. BC ஐ நீட்டி அது வட்டத்தை வெட்டும் புள்ளிக்கு D எனப் பெயரிடுக.
vii. BD இன் நீளத்தை அளந்து எழுதுக.
viii. O இலிருந்து BC இற்கு செங்குத்து வரைக.
ix. AB,BD என்பனவற்றினால் எந்நாண் வட்ட மையத்தில் இருந்து அதிக தூரத்தில் உள்ளது.?

(11)




A,B,C என்பன கிடைத்தரையில் ஒரே நேர்கோட்டில் உள்ள புள்ளிகளாகும். CD என்பது நிலைக்குத்தான கட்டடமாகும். A யிலிருந்து பார்க்கும் ஒருவருக்கு கட்டடத்தின் உச்சி $30^o$ ஏற்றக்கோணத்தில் தெரிகிறது. D யிலிருந்து பார்க்கும் ஒருவருக்கு B ஆனது $60^o$ இறக்கக் கோணத்தில் தெரிகிறது. AB = 10Cm ஆகும்.

$(\sin 60^o = \sqrt{3}/_2 , \sin 30^o = 1/_2)$ i. மேற்படி தரவுகளை வரிப்படத்தில் குறித்துக் காட்டுக.
ii. BD இன் நீளத்தைக் காண்க.
iii. கட்டடத்தின் உயரத்தைக் காண்க.

(12) உடன் பணத்திற்கு ரூபா 36,000 இற்கு விற்பனையாகும் தொலைக்காட்சிப் பெட்டி வாடகைக் கொள்வனவு முறையில் ரூபா 6000 முற்பணம் செலுத்தி வாங்கப்படலாம். எஞ்சிய பணம் 5% எளிய மாத வட்டியுடன் 15 மாதங்களில் சமமான மாதத் தவணைக் கட்டணங்களாக செலுத்தப்பட வேண்டும்.

i. முதற் கொடுப்பனவின் பின் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள தொகை எவ்வளவு?
ii. மாதாந்தம் செலுத்தப்படும் கடன் பகுதி எவ்வளவு?
iii. மாத அலகு ஒன்றிற்கான வட்டி எவ்வளவு?
iv. மாத அலகுகள் எத்தனை?
v. செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி எவ்வளவு?
vi. ஒரு மாதத் தவணைக் கட்டணம் எவ்வளவு?

# ஒளியேற்றப்படும் தீவகம்

## மக்களுக்காக அயராது பணி



மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வருவது மட்டுமல்லாமல் எம்மோடு இருந்து எமக்காக அயராது பணியாற்றி வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே என வேலணை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் அப்புராசா தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட செட்டிபுலம் பகுதிக்கு வடக்கின வசந்தம் திட்டத்தின் கீழ் மின்னிணைப்பை உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்திகளுக்கும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்குமாக அமைச்சர் தலைமை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது பகுதிக்கு மின்சாரத்தைப் பெற்றுத் தருமாறு நாம் அமைச்சரிடம் நாம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக அவர் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடிய தன் பயனாக இன்று இம் மின்விநியோகத்தை நாம் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), வேலணை பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் உரை நிகழ்த்தினர். நிகழ்வில் மின்னிணைப்பை உத்தியோகபூர்வமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார். இதன் போது பிராந்திய ஆணையாளர் துரைராசா, பிரதேச மின்பொறியியலாளர் ஞானகணேசன், வடக்கின்வசந்தம் மின் பொறியியலாளர் கோசல, வேலணை மின்அத்தியட்சகர் செபாஸ்தியாம்பிள்ளை உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## அபிவிருத்தித் திட்டங்கள் தொடரும்



தீவக மக்களின் நலன்சார் விடயங்கள் எம்மால் பூர்த்தி செய்யப்பட்டது போன்று எதிர்காலங்களிலும் எமது பணிகள் தொடருமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை சூரியவத்த பகுதிக்கான மின்னிணைப்பை நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பகுதி மக்களது நீண்டகால எதிர்பார்ப்பு இன்று நிறைவேறியுள்ளது. மின்சாரமானது இருட்டில் வெளிச்சத்தை தருவது மட்டுமல்லாமல் எமது மக்களது வாழ்வை முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

இதுவரையில் மின்னிணைப்புக் கிடைக்காதவர்கள் தமது விபரங்களை இலங்கை மின்சார சபை காரியாலயத்தில் ஒப்படைத்து மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்த அமைச்சர் அவர்கள், மின்னிணைப்பு இரண்டு வாரங்களில் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது மின்விநியோகத்தை அமைச்சர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 8.3 மில்லியன் ரூபா செலவில் இப்பகுதிக்கான மின்விநியோக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன், பிரதித் தவிசாளர் அல்பிரட் உள்ளிட்ட வடக்கின் வசந்தம் மற்றும் மின்சார சபை பொறியியலாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## முச்சக்கரவண்டிகளுக்கு புதிய சட்டம்; மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகம்

முச்சக்கரவண்டிகள் தொடர்பில் புதிய சட்டங்கள் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய முச்சக்கர வண்டிகளை மணித்தியாலத்திற்கு 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் மாத்திரமே செலுத்த முடியும் என புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதனைத் தவிர முச்சக்கர வண்டிகளை செலுத்தும்போது பின்பற்ற வேண்டிய பல்வேறு விதிமுறைகளும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதற்கமைய வலது புறமாக முச்சக்கரவண்டிக்குள் பிரவேசிக்கவோ அதிலிருந்து இறங்கவோ கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.முச்சக்கரவண்டியில் பயணிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையை முச்சக்கர வண்டியின் பின்புறம் இடது பக்கத்தில் மிகவும் தெளிவாக காட்சிப்படுத்த வேண்டும் எனவும் புதிய சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 வயதிற்கு குறைவான இரண்டு சிறுவர்களை ஒரு பயணி என்ற அடிப்படையில் பயணிகளின் எண்ணிக்கையை தீர்மானிக்க வேண்டும்

முச்சக்கரவண்டிக்குள் நேர் எதிரே ஆசனங்களை பொருத்துவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

சாரதி தவிர்ந்த வேறு நபர்கள் சாரதிக்கான ஆசனத்தில் அமர்ந்து செல்வதற்கும் முச்சக்கர வண்டிக்குள் இருந்தவாறு கையேடுகளை விநியோகிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒலிபெருக்கி கருவிகள் அல்லது வேறு உபகரணங்களை முச்சக்கரவண்டியில் பயன்படுத்தக் கூடாது என விசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து பயணிகளும் சாரதி வினவும் பட்சத்தில் செல்வதற்கு உத்தேசித்துள்ள பயணம் தொடர்பில் தகவல்களை வழங்கவேண்டுமெனவும் மானியில் குறிப்பிடப்படுகின்ற மொத்தக்கட்டணத்தையும் செலலுத்த வேண்டுமெனவும் புதியசட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

சட்டவிரோத செயற்பாடுகளுக்காக முச்சக்கர வண்டியை பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கக்கூடாது எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லும் அனைத்து முச்சக்கர வண்டிகளிலும் மானிகள் பொருத்தப்பட வேண்டும் எனவும் புதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விடத்தல்தீவை சேர்ந்த யுவதி மன்னார் நகரில் மாயம்

மன்னார் விடத்தல் தீவைச் சேர்ந்த யுவதி ஒருவரை கடந்த வியாழக்கிழமை மதியம் முதல் காணவில்லை என அவரது பெற்றோர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை முறைப்பாடு செய்துள்ளனர்.


-மன்னார் விடத்தல் தீவைச் சேர்ந்த ஏ.சுகன்னியா (வயது-17) என்ற யுவதியே காணாமற் போயுள்ளார்.

குறித்த யுவதி தனது உறவினர்களுடன் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த நிலையில் மன்னார் விடத்தல்தீவில் உள்ள தனது பெற்றோரிடம் வருவதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள தனது உறவினர் ஒருவருடன் கடந்த புதன்கிழமை குறித்த யுவதி மன்னார் வருகை தந்துள்ளார்.

மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் மதியம் ஒரு மணியளவில் நின்ற போது அழைத்து வந்த உறவினர் கடைக்குச் சென்று விட்டு மீண்டும் அந்த யுவதி நின்ற இடத்திற்கு சென்ற போது யுவதியை காணவில்லை.

அவரை தேடியும் எங்கும் இல்லாத நிலையில் அவருடைய பெற்றோர் மற்றும் உறவினர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த யுவதியும்,அவருடைய பெற்றோர்களும் இந்தியாவில் வசித்து வந்த நிலையில் கடந்த 10 மாதங்களுக்கு முன்பு மீண்டும் இலங்கை வந்து விடத்தல் தீவில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்ரம் திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் வருடாந்த தேர் உற்சவத்தின்போது சுவாமி ஆலயத்தில் இருந்து எழுந்தருளி வருவதையும் தேர் வீதி வலம் வந்து கொண்டிருப்பதையும் காணலாம்..

(50)

# ஆப்கான் கல்லறையிலும் குண்டுவெடிப்பு

# குழந்தைகள் உட்பட 14 பேர் பலி


© AFP/Getty Images


ஆப்கானிஸ்தானில் கல்லறையில் நடந்த சடங்கின்போது குண்டு வெடித்து குழந்தைகள், பெண்கள் உட்பட 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹார் மாகாணத்தில் ரம்ழானையொட்டி கல்லறைக்கு சென்று முன்னோருக்கு அஞ்சலி செலுத்தும் சடங்கு நடந்தது.கனிகெல் மாவட்டத்திலுள்ள கல்லறையில், போரில் உயிரிழந்த கணவர்களுக்கு அஞ்சலி செலுத்த அங்கு ஏராளமான பெண்கள் கூடியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது திடீரெனக் குண்டு வெடித்ததில் 7 குழந்தைகள், 7 பெண்கள் உட்பட 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் ஒரு குழந்தை உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்தனர்.வழக்கமாக நாசவேலையில் ஈடுபடும் தலிபான் தீவிரவாத அமைப்புதான் இந்த செயலை செய்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. அரசுக்கெதிராக சுமார் 12 ஆண்டுகளாக தாக்குதல் நடத்தும் தலிபான்கள், வன்முறை செயல்களை நிறுத்தும்படி ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# வினோத கார்ட்டூன் கண்காட்சி




பிரான்சில் மக்களை கவரும் விதத்தில் மிகப் பிரமாண்டமான கார்ட்டூன் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சி மூலம் பிரான்ஸ் நாட்டு மக்கள் அதிக நகைச்சுவைத் தன்மை கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இந்தக்கண்காட்சியில் ஏராளமான கார்ட்டூன் படங்கள் வைக்கப்பட்டன. இதில் ஜப்பான் நாட்டை சேர்ந்த கனகோ குனோ(Kanako Kuno) ஓவியர் ஒருவர் மை லிட்டில் பிரான்ஸ்(My Little Paris) என்ற தலைப்பில் பிரான்ஸ் நகரில் வாழும் மக்களின் வாழ்க்கை மற்றும் உள்ளூர் சுற்றுலாப்பயணிகள் குறித்த 50 வகையான கார்ட்டூன் படங்களை வைத்திருந்தார்.

இந்தக் கார்ட்டூன் படங்களில் அவரின் நகைச்சுவை திறமையை வெளிப்படுத்தி வரைந்திருந்தார். இவர் வரைந்திருந்த கார்ட்டூன் அனைத்தும் பிரான்ஸ் மக்களை வெகுவாக கவர்ந்தது.

இது குறித்து அவர் கூறுகையில், பிரான்ஸ் நாட்டு மக்களை சிரிக்க வைப்பதற்காகவே இந்த கார்ட்டூனை வரைந்துள்ளேன். மேலும் நான் பிரான்ஸ் நாட்டை மிகவும் விரும்புகிறேன் என்றும் இங்கு வாழ்வதற்கு ஆசைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

# கன்னியாகுமரியில் மட்டும் "தலைவா" வெளியீடு




இளைய தளபதி விஜய் நடித்துள்ள தலைவா படம் கன்னியாகுமரியில் மட்டும் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் தலைவா படம் வெளியிட்டால் குண்டு வைப்போம் என்று மாணவர் அமைப்பின் மிரட்டலால் படம் வெளியாவதில் சிக்கல் நீடிக்கிறது.கன்னியாகுமரியில் மட்டும் விஜய்யின் தலைவா படம் வெளியாகியுள்ளது. அங்கு இரசிகர்கள் மிகுந்த ஆரவாரத்துடன், தலைவா படத்தை கண்டு ஆர்ப்பரித்து வருகின்றனர். சென்னையில் உள்ள அனைத்து திரை அரங்குகளின் முன்னால் இரசிகர்கள் குவிந்து, தலைவா படத்தை திரையிட வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனால் அனைத்து திரை அரங்குகளின் முன்னால், பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. விஜய்யின் தலைவா படத்தைக் காண ஆவலுடன் திரை அரங்கு முன்பு கூடிய இரசிகர்கள ஏமாற்றத்துடன் காத்திருக்கின்றனர்.

சென்னையில் சில திரை அரங்குகள் முன்பு இரசிகர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.முன்னதாக தமிழகமெங்கும் சுமார் 500 தியேட்டர்களில் படத்தை திரையிட திட்டமிட்டிருந்தனர்.

எனினும் தற்போது தமிழகத்தில் தொடரும் தடையால் ரசிகர்கள், அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களுக்கு படம் பார்க்கச் செல்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் தலைவா படத்துக்கு தணிக்கை குழு A+ சான்றிதழ் அளித்திருந்ததால் வரிவிலக்கு குழுவினருக்கு படம் திரையிடப்பட்டு காண்பிக்கப்பட்டது. படத்தைப் பார்த்த குழுவினர் விஜய் பேசும் சில காட்சிகளுக்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளனர்.

# கணவருடன் உறங்கினால் மனைவிக்கு ஆயுள் தண்டனை

## இங்கிலாந்தில் பரபரப்புத்தீர்ப்பு

கணவருடன் தூங்கினால், ஆயுள் தண்டனையை அனுபவிக்க வேண்டி இருக்கும் என்று இங்கிலாந்து நீதிமன்றம் எச்சரித்துள்ளது. இங்கிலாந்தில் வசிக்கும் இந்தியவம் சாவளி பெண்ணுக்கே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

35 வயதான, ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட வாலிபருக்கு இந்தியாவில் பஞ்சாபில் மணப்பெண் பார்த்தனர். மணப்பெண், கால் முடமானவர்.

கடந்த 2009ஆம் ஆண்டு, திருமணத்துக்காக, அந்த வாலிபர், இங்கிலாந்தில் இருந்து பஞ்சாபுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தாலி கட்டுவதற்கு முன்பு, அவரை அப்பெண் பார்க்கவில்லை. தாலி கட்டிய பிறகுதான், தனது கணவர் இயல்பான மனிதர் அல்ல என்று அவர் புரிந்து கொண்டார். இருப்பினும், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அவருடன் வாழத்தொடங்கினார்.

திருமணத்துக்கு பிறகு, இருவரும் இங்கிலாந்து திரும்பினர். இங்கிலாந்து சட்டப்படி, தாம்பத்திய உறவுக்கு சம்மதிக்கவோ, மறுக்கவோ இயலாத நிலையில் உள்ள மனநிலை பாதிக்கப்பட்டவரின் திருமணம் இரத்து செய்யப்படும்.

எனவே, இவர்களது திருமணத்தை இரத்துச்செய்யுமாறு பர்மிங்காமில் இதற்கென உள்ள விசேட நீதிமன்றில் அரசுத்தரப்பு முறையிட்டது. அந்த வாலிபரை, மனநல மையத்தின் பராமரிப்புக்கு அனுப்பி வைத்தது. ஆனால், தங்கள் திருமணத்தை இரத்துச் செய்ய வேண்டாம் என்று அந்தப் பெண் கேட்டுக்கொண்டார். இந்த வழக்கில் நீதிபதி ஹோல்மன் விசித்திரமான தீர்ப்பளித்தார். அந்த வாலி பர், தாம்பத்திய உறவுக்கு உடன்படும் திறன் படைத்தவர் அல்ல என்று நீதிபதி குறிப்பிட்டார்.



எனவே, அவருடன் தூங்கி அவருடைய மனைவி எந்த வகையிலாவது பாலியல் ரீதியாக நெருக்கம் வைத்துக் கொண்டால், அந்த வாலிபர் குற்றச்செயலில் பாதிக்கப்பட்டவராகி விடுவார் என்றும்,அதன் அடிப்படையில் அவருடைய மனைவிக்கு ஆயுள் தண்டனை கிடைக்கும் என்றும் நீதிபதி கூறினார்.அதேசமயத்தில், அந்தப்பெண்ணின் கோரிக்கையை ஏற்ற நீதிபதி, திருமணத்தை இரத்து செய்ய மறுத்து விட்டார். தனது துயரமான நிலைமையை மனவலிமை மற்றும் கண்ணியத்துடன் அப்பெண் தாங்கி வருவதாக அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

கணவருடன் தூங்கினால் ஆயுள் தண்டனை என்று இங்கிலாந்தில் இதுபோன்று ஒரு நீதிபதி தீர்ப்பளிப்பது இதுவே முதல்முறை ஆகும்.

# 40 ஆண்டுகள் வனவாசம் வியட்நாமில் தந்தை-மகன் மீட்பு



வியட்நாமில் 40 வருடங்களுக்கு முன் காட்டிற்குள் பதுங்கிய தந்தையும் மகனும் மீட்கப்பட்டுள்ளனர்.

வியட்நாமில் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னால் ஹோவான் லங் என்பவர் தனது தந்தை, மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வசித்து வந்தார். அப்போது நடைபெற்ற போரில் ஏற்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் அவரது மனைவியும், குழந்தைகளும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் தப்பித்த ஹோவும், அவரது தந்தையும் மத்திய குவாங் நிகாய் மாகாணத்தில் உள்ள அடர்ந்த காடுகளிடையே பதுங்கிவிட்டனர். அதன்பின் அவர்களை யாராலும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

காட்டிற்குள் மரத்தின் மீது பூமியில் இருந்து ஐந்தடி உயரத்தில் அமைத்துக் கொண்ட மரவீடு ஒன்றில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். விலங்குகளை வேட்டையாட அம்புகளையும், கொல்வதற்கு கத்திகளையும் அவர்கள் வைத்திருந்தனர்.

மரங்களை வெட்டுவதற்காக சிறிய கோடரி ஒன்றையும் செய்து வைத்திருந்தனர். இடுப்பில் அரையாடை மட்டுமே அவர்கள் அணிந்திருந்தனர். சோளம், பழங்கள் மற்றும் மரவள்ளிக் கிழங்கின் வேர்களையே உணவாக உண்டு வாழ்ந்து வந்துள்ளனர். 20 வருடங்களுக்கு முன்னால் ஹோவின் சகோதரர் அவர்களைக் கண்டுபிடித்துள்ளார்.

ஆனால், அவர்கள் இருவரும் காட்டைவிட்டு வர மறுத்துவிட்டனர். ஒரு நாள் அவர்களைப் பார்க்க நேரிட்ட உள்ளூர் மக்களுக்கு அவர்களின் காட்டுத்தனமான தோற்றமும், வித்தியாசமான சைகைகளும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இவர்களைப் பற்றி அம்மக்கள் உள்ளூர் சமூகத் தலைவர்களிடம் தெரிவித்தனர். அதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை அன்று, அவர்களைத் தேடி ஒரு குழு காட்டிற்குள் சென்றது. ஐந்து மணி நேரத் தேடுதலுக்குப்பின் மரவீட்டில் அவர்களைக் கண்டுபிடித்த குழு, அவர்களை காட்டிற்கு வெளியே அழைத்து வந்துள்ளது.

# தென்னாபிரிக்க மருத்துவமனை தலைவராக இந்திய பெண்



தென்னாபிரிக்க உலகப் புகழ் பெற்ற மருத்துவமனையின் தலைவராக இந்திய வம்சாவளி பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் கேப் டவுன் நகரில், பிரபல க்ரூட் ஸ்கர் மருத்துவமனை உள்ளது. அங்கு 150 வைத்தியர்களும், 1,500 தாதியர்களும் பணியாற்றுகின்றனர்.உலகின் முதன் முதலாக, 67இல், இந்த மருத்துவமனையில், இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. கிறிஸ் பர்னார்ட் என்ற டாக்டர் இந்த மருத்துவமனையில், இச்சிகிச்சையை வெற்றிகரமாக செய்தார். இந்த மருத்துவமனையின் தலைவராக தற்போது, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாவனா பாட்டீல் நியமிக்கப்பட்டுள்ளார்.தென்னாபிரிக்க கேப்டவுன் பல்கலைக்கழக பதிவாளராகவும், இவர் முன்னதாக பணியாற்றியுள்ளார்.

# சுழிபுரத்தில் புதிய இறங்குதுறை; நேற்றைய தினம் திறந்து வைப்பு



(சுழிபுரம்)

கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யு.என்.எச்.சி.ஆர். இன் நிதியுதவியுடன் யாழ். சுழிபுரம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மீன்பிடி இறங்குதுறை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்தொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன கலந்துகொண்டு இறங்கு துறையினைத் திறந்து வைத்தார்.

குறித்த பகுதி அண்மையில் கடற்படையினரால் விடுவிக்கப் பட்டதையடுத்து, மக்கள் மீன் பிடித்தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். இப்பகுதியில் இறங்குதுறை ஒன்று அமைத்துத் தருமாறு பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க 37 மில்லியன் ரூபா செலவில் இந்த இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடற்தொழில் நீரியல்வள அமைச்சின் ஏற்பாட்டில் குறித்த இறங்குதுறைக்குச் செல்லும் சவுக்கடி வீதி மற்றும் இளைப்பாறும் மண்டபமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் கெட்டியராட்சி, யாழ். மாவட்ட நீரியல் வளத்திணைக் களத்தின் பணிப்பாளர் கணேசமூர்த்தி மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## டெங்கு ஒழிப்புக்கான கருத்தரங்கு

(உடுவில்)

வலி. தெற்கு உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்கு நாளை காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

பொதுமக்களுடன் அதிகளவிலான தொடர்புகளைக் கொண்டுள்ள சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டதாரிப் பயிலுநர்கள் ஆகியோருக்கே இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

பிரதேச சுகாதார வைத்தியதிகாரி தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் டெங்குக் கட்டுப்பாடு சம்பந்தமான பல்வேறு செயல்முறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

## கீரிமலை வரை பஸ் சேவையை விஸ்தரிக்க மக்கள் கோரிக்கை

மாவிட்டபுரம், கீரிமலை வரை தனியார் மற்றும் அரச போக்குவரத்துச் சேவையை நடத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


யாழ்ப்பாணத்தில் இருந்து மாவிட்டபுரம் வரையான தனியார் பஸ் சேவையும் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சேவையும் நடைபெறுகின்ற போதிலும், கீரிமலை வரை குறிப்பிட்ட பஸ் சேவைகள் நடைபெறாமையால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாகக் கீரிமலை செல்ல வேண்டியவர்கள் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுவதுடன், முச்சக்கர வண்டிகளுக்கும் பணம் செலுத்திச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இதே போன்று வலி.வடக்குப் பிரதேச செயலகம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, வங்கிகள், கமத்தொழில் திணைக்களம், கால் நடை திணைக்கள ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் காங்கேசன்துறை வீதி வழியாகவே வரவேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

இத்தகைய நிலையில் குறிப்பிட்ட மூன்று கிலோ மீற்றர் தூரத்துக்கான பஸ் சேவை இன்மையால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு கீரிமலை மாவிட்டபுரம் வரை காங்கேசன்துறை வீதி வழியாக நடைபெறும் அனைத்து பஸ் சேவைகளையும் நடத்துவ தற்கு உரிய அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.





(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கச்சாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில், ஈ.பி.டி.பி. யின் தென்மராட்சிப் பிரிவின் அமைப்பாளரும், சாவகச்சேரி நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சூசைமுத்து அலெக்ஸாண்டர் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். இதன்போது அவருக்கு பொதுமக்கள் முன்னிலையில் பொன்னாடை போர்த்தி சிறப்புக் கௌரவமும் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொது மக்கள் முன்னிலையில் நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் உரை நிகழ்த்தினார்.

இப்பிரதேச மக்களின் தொடர்ச்சியான ஆதரவு எமக்கு கிடைக்குமாக இருந்தால் இந்தப் பிரதேசத்தை மேலும் வளம் கொழிக்கும் பூமியாக எம்மால் அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகளில், பலநூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

## வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் காலை 11.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பல நூற்றுக்கணக்கானவர்களும், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான அடியார்கள் கொடியேற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

அடியார்களது போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து தீவகத்தின் பல இடங்களுக்குச் சென்று வருகின்ற பஸ்கள் அதேபோன்று தீவகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து யாழ்நகருக்கு சென்று வருகின்ற அனைத்து பஸ்களும் அதே போன்று தனியார் சிற்றூர்திச் சங்கத்தினரின் பஸ் சேவைகள் அனைத்தும் ஆலயம் சென்று அதன் பின்னர் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

ஆலயத்திற்குச் சென்று வந்த அனைத்து அடியார்களுக்கான அன்ன தானம், குடிதண்ணீர் போன்ற வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. (05)

## கொழும்பு....

தாக்குதல் சம்பவத்தில் வீடுகள் பலவும், வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. நேற்று மாலை தொழுகையின் பின்னர், பள்ளிவாசலின் முன்றலுக்கு ஆயுதங்களுடன் வந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இருதரப்பிலும் ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து பிரதேசத்தில் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டனர்.

சுவர்ண சைத்திய வீதியில் பழைய பள்ளிவாசலுக்கு பதிலாக, மதவிவகார அமைச்சின் அனுமதி பெற்றுக் கட்டப்பட்ட புதிய பள்ளிவாசலொன்றை திறக்கவிடாமல் பௌத்த பிக்குகள் தலைமையிலான குழு வினர் தொடர்ந்தும் இடையூறுகள் ஏற்படுத்திவருவதாக கடந்த மாதங்களில் முறைப்பாடுகள் வந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் பௌத்த தேரர்களுக்கும் இடையில் இணக்கப்பாடொன்றைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸாரும் கூறிவந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மீண்டும் திறக்கப்பட்ட இந்தப் பள்ளிவாசலுக்கு நேற்று நண்பகல் முதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸாரின் காவலையும் மீறியே இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள் தமிழோசையிடம் கூறினர்.

பள்ளிவாசல் மீதும் அருகி லுள்ள வீடுகள் மீதும் நடத்தப் பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இருதரப்பிலும் மோதல்கள் வெடித்ததாகக் கூறப்படுகிறது. எனினும், பிரதேசத்தில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

## வெலிவேரிய...

தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

சட்டத்தை மீறிச் செயற்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடாத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங் கத்தின முதன்மைப் பொறுப்பாகும் என அவர் சுட்டிக்காட்டிக்காட்டியுள்ளார்.

படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்திய வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக தேவாலயத்திற்குள் பிரவேசித்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களின் போது படையினர் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதித்துச் செயற்படுவதனை உறுதிசெய்ய வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

## எல்லை தாண்டும்...

இவ்வாறு தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய நடவடிக்கையைக் கடற்படையினரும் கண்டுகொள்ளாமல் இருப்பதாக மாதகல் கடற்தொழிலாளர்கள் - அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் குறித்த பிரதேசக் கடற்படை அதிகாரியை அழைத்த அமைச்சர், எல்லை தாண்டிவரும் இந்திய மீனவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று பணிப்புரை விடுத்தார்.

எனினும், எல்லை தாண்டும் இந்திய மீனவரைக் கைது செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தால் மட்டுமே கடற்படையினர் கைது செய்ய முடியும் என்று கடற்படை அதிகாரி தெரிவித்தவேளை, இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் நான் பேசிக் கொள்கிறேன். கடற்தொழில் சார்ந்த அமைச்சராக நான் இருக்கின்றபடியால் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய தேவை எனக்கும் இருக்கிறது.

எனவே இவ்வாறான சம்பவங்களுக்கு கடற்படையினர் அனுமதிக்காது எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கைது செய்யவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, வலி.வடக்கு மாதகல் பகுதியில் மீன்பிடித் துறைமுகமொன்றை அமைப்பது தொடர்பில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஆராய்ந்துள்ளனர்.

அப்பகுதி கடற்றொழிலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையுடன் கூடியதான வரைபடம் தொடர்பிலேயே ஆராய்ந்தனர். இதன் பிரகாரம் அங்கு மீன்பிடித்துறைமுகமொன்றை அமைப்பதற்குரிய தேவை மற்றும் அவசியம் தொடர்பில் துறைசார்ந் தோருடன் அமைச்சர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

## மேற்படிப்புக்கு...

அடுக்கு மாடித் தொடரில் வசித்து வந்த நிலையிலேயே கொலை செய்யப்பட்டுள்ளதாக குறித்த பெண்ணின் தந்தையான செ.குணராசா தெரிவித்தார். உயிரிழந்த பெண் ஒரு குழந்தைக்குத் தாயார் என அப் பெண்ணின் தந்தை குறிப்பிட்டார். தற்போது சடலம் லண்டனில் உள்ள வைத்தியசாலையொன்றில் வைக்கப்பட்டுள்ளதாக லண்டன் பொலிஸ் தரப்பினரால் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் உயிரிழந்த பெண்ணின் தந்தை மேலும் தெரிவித்தார்.

## 25 வருடமாக...

இந்த நிலை இன்னும் தொடர வேண்டுமா? அப்படியான சூழலில்தான் தங்கள் சுயலாபத்திற்காக அரசியல் நடத்த வேண்டும் என தங்களுக்குள்ளே ஒற்றுமை இல்லாது கங்கணம் கட்டி நிற்கும் கபட அரசியல்வாதிகளை மக்கள் இனம்கண்டு சரியானவர்களை தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு மக்களினது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களைச் சாரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் பங்கு பற்றினர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் உட்பட சகல வேட்பாளர்களும் இங்கு உரையாற்றினர்.

(பா)

# 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து மக்களுக்கு தவறான விளக்கம்

## அரசைச் சாடுகிறது ஐ.தே.க



13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. அரசாங்கம் தேவையின்றி 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் விவாதம் நடாத்தி மக்களை பிழையாக வழிநடத்தி வருவதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஆரம்பத்தில் கூச்சலிட்ட அரசாங்கம் தற்போது மௌனமாகிவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். பொருட்கள் சேவைகளுக்கான விலை உயர்வு தொடர்பிலான மக்களின் கவனத்தை திசை திருப்பவே அரசாங்கம் இவ்வாறு 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி விவாதித்ததாகத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு வேறு தொழில் இல்லாத காரணத்தினால் இவ்வாறு 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி குரல் எழுப்பி வருவதாகக் குறிப பிட்டுள்ளார்.

எந்தவொரு மாவட்டத்திலும் எந்தவொரு நேரத்திலும் இராணுவத்தினரை நிலைநிறுத்துவது தொடர்பிலான அரசவர்த்தமானியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கையொப்பமிட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை கட்டுப்படுத்தவே இவ்வாறு ஜனாதிபதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்

# லக்சறி வாகனங்களின் இறக்குமதி அதிகரிப்பு

இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்கள சுப்பர் லக்சறி வாகனங்களின் பதிவின் மூலம் மாதாந்தம் 10 மில்லியன் வருமானம் கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீ.எம்.டபிள்யூ, எஸ், யகூவர் மற்றும் லான்ட் குறூசர் வாகனங்களே அதிகளவில் பதிவுசெய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டில் இவ்வாறு சுப்பர் லக்சறி வாகனங்களின் பதிவின் மூலம் 1.25 பில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டது. ஆனால் இந்த ஆண்டில் 580 மில்லியன் ரூபா முதல் ஆறு மாதங்களில் வருமானமாக பெறப்பட்டது.

இவ்வாறே வாகனப் பதிவின் மூலம் 39 மில்லியன் மூபா வருமானமாக பெற்ற நியைில் இந்த ஆண்டில் முதல் ஆறு மாதத்தில் 26 மில்லியன் ரூபா வருமானமாக கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டில் வாகனங்களின் இறக்குமதி வரி மற்றும் பதிவுகள் மூலம் 6.57 பில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்ட நிலையில் ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் 2.44 பில்லியன் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீனவர் இலங்கையில் தடுத்து வைப்பு


## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீனவர் சிறைவாசம் அனுபவித்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர சல்மான் குர்ஷித் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 30ஆம் திகதியன்றுள்ளவாறு கிடைக்கப் பெற்றுள்ள தகவலின்படி இலங்கையில் 114 இந்திய மீனவர்கள் 21 இந்திய மீன்பிடிப் படகுகள் சகிதம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு மேலாக போதைப் பொருள் மற்றும் சட்ட விரோத பொருட்களை கடத்திய குற்றச்சாட்டுக்களின் பேரில் இலங்கையில் 14 இந்திய மீனவர்கள் நான்கு படகுகள் சகிதம் சிறைவாசம் அனுப வித்து வருவதாகவும் குறிப் பிட்டார்.

அமைச்சர் குரஷித் இது தொடர்பில் மேலும் தெரிவித்



துள்ளதாவது,

எமது மீனவர்களின் சேமநலன மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அரசாங்கம் அதி முக்கியத்துவம் வழங்கி வருகின்றது.

இந்திய மீனவர்களின் கைது பற்றிய செய்திகள் கிடைக்கப் பெற்றதும் அரசாங்கம் இராஜதந்திர நகர்வுகள் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் உடனடியாக தொடர்பு கொண்டு அவர்களைத் துரிதகதியில் விடுதலை செய்து தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பிவைக்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு மட்டங்களில் நடத்தப்பட்ட இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளின் போதும் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த வருட ஜனவரியில் நடைபெற்ற கடற்றொழில் குறித்த இந்திய இலங்கை கூட்டுச் செயலணியின் நான்காவது கூட்டத்தில் இரு நாடுகளையும் சேர்ந்த மீனவர்களின் சேமநலன் மற்றும் பாதுகாப்பு குறித்து இரு நாட்டு அரசாங்கங்களும் செய்து கொள்ளப்பட்ட பரஸ்பர ஒப்புதலுக்கு ஆகக்கூடியளவிலான முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென இரு தரப்பினரும் மீண்டும் வலியுறுத்தி யிருந்ததாகவும் அவர் மேலும் பிரஸ்தாபித்தார்

# அரசுடன் இணைந்தமையால் கவலைப்படாத சமரசிங்க

(கொழும்பு)

அரசுடன் இணைந்து கொண்டமை தொடர்பில் எவ்வித கவலையும் இல்லை யென அமைச்சரும், ஐ.தே.க. வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தனது பார்வையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறந்த தலைவரெனவும், நாட்டிற்கு முதலிடம் அளிப்பவரெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க கட்சியின் தலைவர் ரணிலுடன் எவ்வித முரண்பாடுகளும் இல்லாதபோதிலும் அரசுடன் இணைந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின்



முதல் உறுப்பினர் தான் எனவும் சமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியுடன் இணைவதன் மூலம் நாட்டிற்கு சேவை செய்யமுடியும் எனக் கருதியதாலேயே அரசுடன் இணைந்து கொண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நவிப்பிள்ளையின் இலங்கை விஜயம் சர்வதேச விசாரணைக்கானதே

## என்கிறார் தமரா குணநாயகம்



அமெரிக்காவின் தேவைக்கமைய இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துவதற்கான விடயங்களை தேடுவதற்காகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை செல்வதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்திருந்த யோசனையில் இலங்கை மீது சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என வலியுறுத்தியிருந்தார்.

எனினும், விசாரணையாளர் யார் என்பதை அவர் தனது யோசனையில் முன்வைக்கவில்லை. எனினும் அவரே அந்த விசாரணையாளர்.

அவரது இந்த செயற்பாடு தந்திரமானது. இது பற்றிய புரிதல் எமக்கில்லை.

2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் அறிக்கையொன்றை நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்க உள்ளார்.

தமக்குக் கட்டுப்பட்ட நாடாக இலங்கை இருக்க வேண்டும் என்பதே மேற்குலக நாடுகளின் தேவையாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குடிக்க நீர் கேட்டால் துப்பாக்கிப்பிரயோகம்

(கொழும்பு)

நீரைக் கோரிய மக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்படுவதாக மக்கள விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

குடிப்பதற்கு நீரை கேட்டால் அவர் எதிரியாக இருந்தாலும் அவருக்கு நீரை வழங்கும் சம்பிரதாயமே நாட்டில் காணப்படுதாகவும் கம்பஹாவில் நடைபெற்ற வைபவமொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களை வேட்டையாடி வாழ்ந்த காலமொன்று காணப்பட்டது,




அவ்வாறானதொரு கலாசாரமே இன்று நாட்டில் காணப்படுகிறது.

தற்போது நாட்டில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்கள் இராணுவத்தைக் கொண்டு முடக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாவற்குழியில் கைக்குண்டு வீச்சு

நாவற்குழிப் பகுதியில் கைக்குண்டு வீச்சு சம்பவம் ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

நாவற்குழியிலுள்ள புத்தர் சிலைக் கருகாமையிலேயே கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# தேர்தல் வன்முறை தொடரும் முறையீடு

Report
election
Violence !

(கொழும்பு)

தேர்தல் வன்முறை தொடர்பாக 60 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தேர்தல்கள் செயலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதுவரை சுமார் 68 முறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளதாக தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு செயலகத்திற்கு கிடைக்க பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

மத்திய மற்றும் வட மத்திய மாகாணங்களிலிருந்தும் தேர்தல வன்முறைகளுடன் தொடர்புபட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதில் அதிகமான வன்முறைகள் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை என தேர்தல்கள் செயலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

# ஆஷஸ் தொடர்

## மூன்றாவது போட்டி

### இரண்டாம் நாள் ஆட்டம்

இங்கிலாந்து 238
லயன் 4 விக்கெட்

VS



அவுஸ்ரேலியா 222/5
றோஜர்ஸ் ஆட்டமிழக்காமல் 101
புரோட் 4 விக்கெட்

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.